Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-19 02-05-2005 திங்கட்கிழமை ஓசை 73



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் நமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11478)

# தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பின்படி துடிப்புடன் பணியாற்றும் நாளேடு!



### ஈழநாதம் (மட்டு. பதிப்பிற்கு) சு.ப. தமிழ்ச்செல்வன் புகழாரம்

(மட்டக்களப்பு)

எமது தேசத்தின் யதார்த்த நிலை, அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் உள்ளத்துணர்வுகள் உண்மை நிலை மாறுபடாது வெளியுலகிற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றே எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்புக்களை மனதில் கொண்டு ஆற்றலுடனும், துடிப்புடனும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அதன் பணி, எமது தேசத்திற்கும் அப்பகுதி மக்களுக்கும் உற்சாகத்தையும், மகிழ்வையும் அளித்துள்ளது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பின் ஓராண்டு நிறைவு மலருக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வழங்கிய வாழ்த்துச் செய்தியில்,

ஒரு தேசத்தின் சமூக, கலை, பண்பாட்டு நிகழ்வுகளைக் காலத்தின் பிரதிபலிப்பாக அவற்றின் உண்மை நிலை மாறு

(11ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் தாயகத்தில் பேரெழுச்சியுடன் 'மே' நாள்

# தேசியத் தலைமையை வலுப்படுத்துவோம்;

# போராட்டத்தை அர்ப்பணிப்புடன் தொடர்வோம்!

## பொது அமைப்புக்கள் பிரகடனம்

(நமது நிருபர்)

**தமிழீழ தேசியத் தலைமையை வலுப்படுத்தி உயர் தர்மத்தையும் நியாயத்தையும் கொண்ட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பயணிப்போம் என்ற தொனிப் பொருளுடன் மே நாள் நிகழ்வுகள் நேற்று தமிழீழப் பிரதேசமெங்கும் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.**

மாவட்ட ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர். இராணுவ அராஜகங்களையும் தமிழீழப் பொருண்மிய வளங்கள், பொருளாதாரச் செயற்பாடுகளையும் சுனாமிப் பாதிப்புக்களையும், யுத்த அழிவுகளையும் பல்வேறு வகைகளில் சித்தரிக்கும் நூற்றுக் கணக்கான ஊர்த்திகளை தொழி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவராமின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள 12 புலி முக்கியஸ்தர் மட்டு. பயணம்

பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரத்தினம் சிவராமின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக விடுதலைப்புலிகளின் தலைமையகத்திலிருந்து 12 பேர் கொண்ட குழுவொன்று நேற்று மாலை மட்டக்களப்பைச் சென்றடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, விளையாட்டுத் துறை பொறுப்பாளர் பாப்பா, நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் இளங்கோ ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். ஓமந்தை

(11ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்தின் மீட்பிற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்!

### யாழ் மாவட்ட தொழிற்சங்க கூட்டமைப்புப் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசத்தின் இருப்பையும், சுதந்திரத்தையும் மீட்பதற்காக பல்வேறு களங்களிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை பொருத்தமான வகையில் வழிநடத்தும் தமிழ்த் தேசிய இனத்தின் தலைமையாகிய தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எமது தேசியத் தலைவர் ஆகிய மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் எமது பூரண ஒத்துழைப்பை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என உறுதி பூணுகின்றோம் என யாழ். மாவட்ட தமிழ்த்தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பின் மே நாள் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சிங்கள மேலாதிக்க அதிகார வர்க்கமானது தொடர்ந்

(11ஆம் பக்கம் பார்க்க)

### –மாமனிதர் சிவராமின் கொலையுடன் தொடர்புடைய–


## கருணா குழு உறுப்பினர் இனியபாரதியை காப்பாற்ற சிறிலங்கா அரசாங்கம் முயற்சி

மாமனிதர் சிவராமின் கொலையுடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் கருணா குழுவின் முக்கியஸ்தரான இனியபாரதியைக் காப்பாற்றும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.பம்பலப்பிட்டி பகுதியில் சிவராமை கடத்தியவர்களில் இனியபாரதியும் ஒருவர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.இந்த நிலையில் நேற்று அம்பாறையில் இனியபாரதியும் மற்றுமொருவரும் சிறிலங்கா பொலிசாரால் கைது

(12ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில்....







(படங்கள் : சோதி)

## வரிவிளம்பரம்

**2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி**

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசாயனவியல் வகுப்பு- புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம் (சி:11780)

**பாடசாலை அதிபர்களுக்கு**

2005 ஆம் ஆண்டுக்கான புதிய கணிப்பீட்டறிக்கைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். நேரடியாக பாடசாலைகளுக்குக் கிடைக்கச் செய்யப்படுவர். வெளியீடு:MR.Publications யாழ்ப்பாணம். தொடர்பு:குமரன்ஸ் புத்தகசாலை, புதுக்குடியிருப்பு.(5841)

**விற்பனையாகிறது**

இ.நிர்மலன் ஆசிரியர் விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் தரம் 7 முதல் O/L வரை விரிவான பாடப் பரப்பு, பரீட்சை வழிகாட்டிகள், விஞ்ஞான விளக்கங்கள் மற்றும் இலவசப் பரீட்சை வினாத்தாள்கள் தரம் 1,2,3,4 அனைத்துப் பாடங்களும் அடங்கிய பரீட்சை வழிகாட்டிகள் வன்னியிலுள்ள அனைத்து அறிவமுது புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

T.P 0777413990 (6088)

**2007 A/L உயிரியல் வகுப்புக்கள்**

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்- சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

**சீமெந்துக்கல் விற்பனைக்கு உண்டு**

அன்புவாணிபத்தில் சீமெந்துக் கல் விற்பனைக்குண்டு.அளவு-"6X4"x12" கிடைக்குமிடம் அன்பு வாணிபம், அந்தோனியார் கோவிலடி,அளம்பில் விலை ஒருகல் 20/=. (5919)

**நீங்காத நினைவலைகள்**

**5 ஆம் ஆண்டு** **9 ஆம் ஆண்டு**





**மரியதாஸ் சுமலதா**
தோற்றம்: 1983-01-27
மறைவு: 2000-05-02

வீரவேங்கை **பிரசாந்தன் (பசுபதி மனோகரன்)**
தாயின் மடியில்: 1975-02-23
தாயக மண்ணில்:1996-07-19

பறந்து விட்ட
எம்பாசப் பறவைகளே
உம் பாச நினைவுடன்
பாரினில் நாம் தினந்தோறும்
வாழ்கின்றோம்.

ஜெயந்திநகர், கிளிநொச்சி. (சி.11854) தகவல்:- மரியதாஸ் (விஜிதா).


## மீனவர்களைத் துன்புறுத்தி கப்பம் பெறும் ஊர்காவற்றுறை கடற்படையினர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்துறை கண்ணகை அம்மன் கோவிலடி பகுதியில் வசிக்கும் சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட மீனவர்கள் கடற்படையினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பலத்த சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். தொழிலுக்காக கடலுக்குச் செல்வதாயின் நீண்ட நேரம் காத்திருந்து அனுமதி அட்டை எடுத்துச்சென்று பின் அவை பரிசீலிக்கப்பட்ட பின்னர் தான் தொழிலுக்குச் செல்ல முடியும்.

மேலும் அவ்வாறு சிரமத்தின் மத்தியில் சென்று பிடிக்கப்படும் மீனில் கடற்படையினருக்கு ஒரு பகுதி கட்டாயமாக கொடுக்கப் படவேண்டும். கொடுக்க மறுத்தால் அல்லது எங்காவது முறையிட்டால் கடற்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் என கண்ணகையம்மன் கோவிலடி மீனவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

## மாமனிதர் சிவராமிற்கு இன்று கிளிநொச்சியில் இரங்கல் நிகழ்வு

படுகொலை செய்யப்பட்ட பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரட்ணம் சிவராம் அவர்களிற்கான இரங்கல் நிகழ்வு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழத் தேசியக் தொலைக் காட்சியின் ஏற்பாட்டில் மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இவ் இரங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது. இவ் இரங்கல் நிகழ்வில் பத்திரிகையாளர்கள், போராளிகள், மக்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி யினர் குடும்பப்பெண் மீது தாக்குதல்

(அலுவலகசெய்தியாளர்)

ஊர்காவற்துறையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் இருவரால் குடும்பப் பெண்ணொருவர் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த சூட்டி என்பவரும் ராசன் என்பவரும் ஊர்காவற்துறையைச் சேர்ந்த திருமதி அந்தோனிப்பிள்ளை என்ற குடும்பப் பெண்ணை வீடு புகுந்து தாக்கியுள்ளனர்.

உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே இப்பெண் தாக்கப்பட்டுள்ளார். ராசன் என்பவர் தாக்குதலுக்குள்ளான பெண்ணின் சகோதரனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



ஆமரர்
**செபஸ்தியாம்பிள்ளை யோசேப்**
(இராசதுரை-ஞானம்ஸ் பல்பொருள் வாணிப உரிமையாளர்)

அன்னை மடியில்:-27.06.1939 ஆண்டவன் அடியில்:-02.04.2005

பாசத்தின் ஜோதியே பண்பின் இருப்பிடமே
பாரினில் நால்வருக்கு மூத்தவராம் முத்தே
வாசமலராய் வாழ்வு கண்ட வான்சுடரே
வழிநடுவில் வளமிழந்து போயினையோ.

கானமயிலொன்று காலொடிந்து வீழ்ந்தது போல்
வானநிலவை வான்முகில் மறைத்தது போல்
ஈனவாழ்வை இன்று முடித்தனையோ
தேனமுதே உன் பெருமை சொல்லிடப் போமோ.

பெற்று வளர்த்தாளாக்கி பேணி உறவுதந்து
பற்றுடனே பலவும் தந்த பாசமழையே
ஏற்புடம்பு பொசுங்கிட ஏங்கித்துடித்தே
ஏன் வந்து சேர்ந்தது ஐயா அகாலச்சாவு

மாறாத வள்ளலே மாமருந்தே தேவன்
மாண்புறத் தன்னுலகு அழைத்தானோ
தேறாது கதறுதையா தேகம் பதறுதையா
கூறாது சென்றீரே இறைபாதமதி இளைப்பாறுவீர்

மங்காத புகழோன் எங்கள் தெய்வ
மாசற்ற இராசதுரையெனும் நல்லோன்
திங்களென வானில் ஒளிர்வான் எம்
திகழொளியாய் நெஞ்சில் வைத்து அஞ்சலிப்போம்.

*எங்கள் இதய தெய்வத்தின் இறுதி நிகழ்வில் பங்கெடுத்தோருக்கும், ஓடிவந்து உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 02.05.2005 இன்று காலை 6.30 மணிக்கு பூநகரி அடைக்கலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இவ் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு இவருக்காக மன்றாடவும், அன்றையதினம் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.*

மட்டுவில்நாடு மேற்கு,வாடியடி, பூநகரி (சி.11855) தகவல்:- மனைவி,பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,உற்றார், உறவினர்கள்.

## தேசியத்தை நேசித்த தோழனுக்கு...

**மாமனிதர் தர்மரத்தினம் சிவராம்**

உங்களுடன் தோழமை கொண்டதால்-மேலும் உறுதி பெற்றது எம் இலட்சியம்



- துணிவு
- உண்மை
- எளிமை
- பகுத்தறிவு
- தேசப்பற்று
- தலைமைப்பற்று
- மொழிப்பற்று
- ஆதிக்க எதிர்ப்பு

அறிவமுது பொத்தகசாலை

(சி.11832)

# தீவிரவாதத் தாக்குதலை நிறுத்தினால் சதாம் உசேனை விடுவிக்கத் தயார்

## -அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பேரம்

(பாக்தாத்)

**ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதலை நிறுத்தினால் சிறை வைக்கப்பட்டுள்ள ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம் உசேனை விடுதலை செய்யத் தயாராய் இருப்பதாக அமெரிக்கா பேரம் ஒன்றிற்குத் தயாராகியுள்ளதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**



ஈராக்கில் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட சதாம் உசே'ன் இப்போது சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார். அவர் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. அவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

இந்த நிலையில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்டு ஈராக்கிற்கு ரகசிய பயணம் மேற் கொண்டிருந்ததாகவும், சிறையிலிருக்கும் சதாம் உசேனை அவர் சந்தித்து ரகசிப் பேரம் நடத்தியதாகவும், தீவிரவாதிகள் தாக்குதலைக் கைவிட்டு போர் நிறுத்தம் செய்யும்படி நீங்கள் வேண்டுகோள் விடுத்தால் உங்களை விடுதலை செய் கின்றோம் என்று சதாம் உசேனிடம் அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இதற்கு சதாம் மறுத்து விட்டார் எனவும் தீவிரவாத தாக்குதலை நிறுத்த முடியாது என்று சதாம் திட்டவட்டமாக அறிவித்து விட்டார் எனவும் லண்டனில் இருந்து வெளியாகும் அல் அராபி பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.ஏற்கனவே ஈராக் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா கடந்த வாரம் ரகசியப் பேரம் நடத்தியுள்ளது. தாக்குதலை நிறுத்தினால் சதாம் உசேனுக்கு மரணதண்டனை வழங்காமல் பார்த்துக் கொள்வோம் என்றும் அமெரிக்க ஆசை காட்டியதாகவும் இதைத் தீவிரவாதிகள் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கில் தீவிரவாதிகள் தாக்குதலில் இது வரை 1200 அமெரிக்க வீரர்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் பாக்தாத்திற்கு வடக்கே 57 கி.மீ அப்பாலுள்ள பகோலாவில் அமெரிக்க மூன்றாவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் ஒருவர் ஈராக்கியச் சிறுவர்களிற்கு பெருவிரல் உயர்த்திக் காட்டுகிறார்.

# வீட்டோ விடயத்தில் பாரபட்சம் கூடாது

## ஜப்பான் பிரதமர் கொய்சுமி வலியுறுத்து



ஐ.நா பாதுகாப்பு மன்றத்தில் புதிதாக நிரந்தர உறுப்பினர்களைச் சேர்க்கும் போது அனைத்து உறுப்பு நாடுகளுக்குமே 'வீட்டோ' அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதில் எவ்வித பாரபட்சமும் இருக்கக் கூடாது என ஜப்பான் பிரதமர் கொய்சுமி கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு நிரந்தர அந்தஸ்து அளிப்பதற்கு எதிர்ப்புக்காட்ட வேண்டாம் என பாகிஸ்தானை கேட்டுக்கொள்வோம் எனவும் ஜப்பான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொய்சுமி-மன்மோகன் பேச்சுவார்த்தையின் போது வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து விவகாரமும் அலசப்பட்டது.

# ஈராக்போர் தொடர்பில் பொய்த் தகவல்; டொனிபிளேயர் மீது குற்றச்சாட்டு

(லண்டன்)

இங்கிலாந்தில் விரைவில் பொதுத்தேர்தல் நடக்க இருக்கிறது. இதில் ஆளும் தொழிலாளர் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும்இடையே கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமர் டொனிபிளேயர் மூன்றாவது முறையாக பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவாரா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் மைக்கேல் ஹொவர்டு தீவிர பிரசசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். ஈராக்போர் இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய இடத்தை பிடிக்கும். இது தொடர்பாக மைக்கேல் ஹொவர்டு கூறியிருப்பதாவது;

ஈராக்போர் தொடர்பாக டொனிபிளேயர் உண்மைகளை நாட்டு மக்களுக்கு மறைத்து விட்டார். அவர் தொடர்ந்து மக்களிடம் பொய் கூறி வந்திருக்கிறார். இதற்காக மக்கள் அவரைத் தண்டிக்க வேண்டும். பொய்த் தகவல்களை கூறிய டொனிபிளேயர் மீது புதிய அரசு வழக்கு தொடரும். அவருக்கு உரிய தண்டனை வழங்கப்படும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சதாம் காலத்துப் புதைகுழி தெற்கு ஈராக்கில் கண்டு பிடிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் சதாம் உசேனால் படுகொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 1500 உடல்களை கொண்ட சவக்குழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில்சதாம் உசேன் ஆட்சியின்போது தனக்கு எதிராக கிளர்ச்சி செய்த குர்திஷ் இன மக்களை சதாம் கும்பல் கும்பலாக கொன்று புதைத்தது அப்படிப் புதைக்கப்பட்ட 350 சவக் குழிகளை அமெரிக்கப் படையினர் கண்டு பிடித்துள்ளனர். அவற்றில் சில பெரிய குழிகளில் ஆயிரக் கணக்கான மக்கள் ஒட்டு மொத்த மாக புதைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது தெற்கு ஈராக்கில் சமாவா என்ற இடமருகே மேலும் ஒரு சவக்குழியை அமெரிக்க படையினர் கண்டு பிடித்துள்ளனர்.அதில் 1500 பேர் புதைக்கப்பட்டுள்ளனர்.

குர்திஷ் இன மக்களான அவர்களில் பெரும்பான்மையோர் பெண்கள், குழந்தைகள் ஆவார். அவர்கள் வரிசையாக நிறுத்தி ஏ.கே. 47 ரக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இது சதாம் உசேன் படையினர் நடத்திய வேட்டை என்று தெரிய வந்துள்ளது. போர்க் குற்றம் புரிந்த கைதியாக இருக்கும் சதாம் உசேனின் கணக்கில் இந்த படுகொலைகளும் சேர்க்கப்பட்டு விசாரணை நடக்கும் என தெரிவிக்கப்படுகிறது.



எகிப்தில் குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் வேலியில் படிந்த இரத்தக் கறையைச் சிறுவன் ஒருவன் அவதானிக்கின்றான்.

# எச் 1 பி விசா முறையை தூக்கி எறியுங்கள்

## புஷ்சுக்கு மைக்ரோசொப்ட் பில்கேட்ஸ் வேண்டுகோள்!

(வோஷிங்டன்)

எச்1பி விசா முறையைத் தூக்கி எறிந்து விட்டு வெளிநாட்டு தொழில் நுட்ப அறிஞர்களை இருகரம் நீட்டி வரவேற்க அமெரிக்கா தயாராக வேண்டும் " என மைக்ரோசொப்ட் நிறுவன அதிபர் பில்கேட்ஸ் அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி வோஷிங்டனில் மென்பொருள் தொழில்நுட்ப நிபுணர்கள் குழுக் கூட்டத்தில் பேசிய பில்கேட்ஸ் மிகத் துணிச்சலாகத்தன் கருத்துகளை எடுத்துரைத்தார்.

அமெரிக்காவின் ஏகோபித்த மன்னராக ஒரே ஒரு நாள் நான் நியமிக்கப்பட்டு அமெரிக்கக் கொள்கைகளைச்சீர்திருத்தும் உரிமை பெற்றால் அறிவுத்திறன் மிக்கவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதைத் தடுக்கும் 'எச்1பி' விசா முறையை நீக்கி விடுவேன் என்றார் ஆண்டுக்கு 65 ஆயிரம் பேருக்குத் தான் அமெரிக்காவில் நுழைய அனுமதி கிடைக் கிறது. இதனால் மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்குத் தேவையான முழுத் தகுதியுள்ள கணினி அறிவியல் பயின்ற விண்ணப்பதாரர்களை தேர்வு செய்வது பெருமளவில் தடைப்படுகின்றது. இந்த நடைமுறை சுவதேச சாப்ட்வேர் போட்டியிலிருந்து அமெரிகாவை வெளியேற்றிவிடும் நான் இப்படி வெளிப்படையாய்ப் பேசுவது எனக்குப் பல சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதை நான் அறிவேன்.

இந்தியாவும் ,சீனாவும் அதிகளவில் கணித மற்றும் அறிவியல் வல்லுநர்களை உருவாக்குகின்றன. அமெரிக்கக் கல்வி முறை இது போன்ற வல்லுநர்களை அதிகம் உருவாக்க வழி செய்வதில்லை மேலும் .இந்தியா . சீனா போன்ற நாடுகளில் உருவாகும் வல்லுனர்கள் தற்போது வேறு நாடுகளுக்கு சென்று பணி புரிவதில் ஆர்வம் காட்டுவதில்லை தங்கள் சொந்த நாட்டிலேயே பணிபுரிய ஆர்வம் காட்டுகின்றனர்.



தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அமெரிக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் நம் நாட்டில் தொழிநுட்ப வல்லுநர்களின் தேவை அதிகமாக இருக்கும் போது 'எச்1பி' விசா நடைமுறையை ஏன் அமெரிக்க அரசு மாற்றி அமைக்கக்கூடாது? இவ்வாறு பில்கேட்ஸ் கூறினார்.

# சீனாவில் நிலக்கரிச் சுரங்க வெடி விபத்து 15 பேர் பலி 4 பேரைக் காணவில்லை

(பீஜிங்)

சீனாவின் சான்ஷி பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். நான்கு பேரைக் காணவில்லை.

சீனாவில் உலகின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. இந்த சுரங்கங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு ஏராளமான பேர் பலியாகி வருகின்றார்கள். கடந்த மூன்று மாதங்களில் சுரங்க விபத்துக்களில் 1,113 பேர்பலியாகியுள்ளனர்.

# இராணுவம், பொலிஸ் மோதல் ஆப்கானிஸ்தானில் ஆறு பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஒரு பெண் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக இராணுவத்தினருக்கும், பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 6 பேர் பலியானார்கள். 12 பேர் காமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் ஈரான் எல்லை அருகில் 'ஹெராப்' என்ற நகரிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரே மேற்படி பெண்ணை சுட்டுக் கொன்றனர். இந்தச் சம்பவம் பற்றி கேள்விப்பட்ட பொலிசார் விரைந்து சென்றனர். பெண்ணைச் சுட்டுக் கொன்ற இராணுவ வீரரை கைது செய்தனர்.

இதனால் இராணுவத்தினர் கொதிப்படைந்தனர். பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிசாருடன் கடுமையாக மோதினர். கைது செய்யப்பட்ட இராணுவ வீரரை மீட்டார்கள் இதனை அடுத்து மோதல் வலுத்தது. இந்த கண்மூடித்தனமான தாக்குதலில் அப்பகுதி போர்க்களமானது. இதில் ஆறு பேர் பலியானார்கள். 12இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

# துருக்கியில் நிலநடுக்கம்

துருக்கியின் கொரம் மாநிலத்தில் சனிக்கிழமை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் அளவு 4.7 என ரிக்டர் அளவு மானியில் பதிவானதாக பூகம்பப் பதிவு மையம் தெரிவித்தது.

உஸ்மானிக் என்ற இடத்தில் பூகம்ப செய்தி கேட்டு பீதி அடைந்த 25 வயது பெண் மாரடைப்பால் மரணமானார்.

# சிவராம் படுகொலை பலவீனமடைந்துள்ள சிறிலங்காவின் பத்திரிகை சுதந்திரத்திற்கு வீழ்ந்த அடி!

## - வடக்கு- கிழக்கு மனித உரிமை செயலகம் அறிக்கை

**பிரசித்தி பெற்ற ஊடகவியலாளர் டி.சிவராமின் படுகொலை அதிர்ச்சி தருகிறது என கிளிநொச்சியிலுள்ள வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது. பிரபல ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி கொழும்பு நகரில் கடத்திக் கொலை செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் கொலையானது ஏற்கனவே பல வீனமடைந்து வரும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு மேலும் விழுந்த ஓர் அடியாகும். இது இறந்துகொண்டிருக்கும் இலங்கை ஜனநாயகத்தின் பிரேதப்பெட்டியில் அடிக்கப்பட்ட மற்றோர் ஆணி எனலாம். கொழும்பிலுள்ள ஓர் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்துக் கடத்தப்பட்ட அவரின் உடல் பாராளுமன்றக்கட்டடத் தொகுதிக்குப் பின்புறமாக 500 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டமை இதற்கு அடையாளமாகக் கூறப்படுகின்றது. ஆயுதம் தாங்கியோரால் சிறிலங்கா ஆட்சிப்பீடத்திற்கு அண்மையாகக் கொலை செய்யப்பட்ட சிவராம் ஏற்கனவே கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் நீளமான பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த 20 வருடங்களாக இரகசியமாகக் கொலை செய்யப்படும் ஊடகவியலாளர் பற்றி வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது. இது சிறிலங்கா அரசுக்கும்,அதன் பொலிஸ்துறைக்கும் ஓர்அவமானமானதாகும். இலங்கையின் நிலவரம் பற்றி ஆவலுடன் வாசித்தறியும் உள்ளூர் சர்வதேச வாசகர்களுக்கு சிவராம் எழுதும் அரசியல் களநிலவர ஆய்வறிக்கைகள் ஆர்வம் ஊட்டுவனவாக அமைந்தன. இவ்வகையான அறிக்கைகளுக்கு அவரின் மறைவு பெரிய இடைவெளியாகும். கடந்த காலங்களில் சிவராம் தனது யதார்த்த பூர்வமான அறிக்கைகளின் சார்பில் பல அச்சுறுத்தல்களைப் பெற்றிருக்கின்றார். கடந்த வருடத்தில் இருமுறை சிறி லங்கா பொலிசார் அவரது வீட்டை ஆயுத வேட்டையின் சார்பாகத் தேடியுள்ளனர். உண்மையில் இத்தகைய தேடுதல்கள் அவரது ஆய்வுகளை நிறுத்துவதற்குக் கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளாகும். அதே நேரத்தில் பத்திரிகை நிருபர்கள் சிவராமின் பாதுகாப்பற்ற நிலையைப்பற்றி தங்கள் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளனர். 2001 ஆம் ஆண்டு சிவராமும் அவரை ஒத்த பத்திரிகை நிருபரும் மட்டக்களப்பில் இருக்கும் ஓர் கழகத்தில் வைத்துத் தாக்கப்பட்டனர். இதனால் சிவராம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இத்தாக்குதலுக்கு பாதுகாப்புப்படையே காரணம் எனச் சந்தேகிக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் மிகவும் பிரசித்தி பெற்ற பி.பி.சி. நிருபர் மயில்வாகனம் நிமலராஜன், மட்டக்களப்பில் 2004 இல் கொல்லப்பட்ட நடேசனும் அரச பாதுகாப்புப்படையால் கொல்லப்பட்டனர் என சந்தேகிக்கப்பட்டது. சிவராமின் படுகொலை சம்மந்தமாகத் துயருறும் எல்லா மனித உரிமைகள் அமைப்புக்களுடனும் வடகிழக்கு மனித உரிமைகள் செயலகமும் இணைந்து விலை மதிப்பற்ற பத்திரிகைச் சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலாவதியான பொருட்கள் அழிப்பு

(மன்னார்)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்துவந்த வர்த்தகர்களுக்கு எதிராக கடந்த 24 ஆம் திகதி நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் மன்னார்ப் பகுதியில் நடவடிக்கை மேற்கொண்டனர் திடீர் சோதனையின்போது காலாவதியான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு கடந்த வியாழனன்று நடைபெற்றது.

முல்லை மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறையினரால் நடாத்தப்பட்ட மாதாந்த வீர்முரசு நிகழ்வு மாலை 8.30 மணியளவில் சின்னச்சாளம்பன் கிராமத்திலுள்ள அன்பழகன் முன்பள்ளியின் மாதர்சங்கத் தலைவி தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் ஏற்ற கலை நிகழ்வுகள் ஆரம்பமானது.

கருத்துரைகளை முத்துஐயன் கட்டு வலதுகரை அ.த.க பாடசாலை ஆசிரியர் நந்தினி, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன்,ஊடகப் பேச்சாளர், சி. வேதவனம், பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் ஆகியோர் வழங்கினர். (05)

## சுனாமியால் பாதிப்புற்ற உயர்தர மாணவருக்கு இலவச வகுப்புக்கள்

திருகோணமலை கல்வி அபிவிருத்தி அமைப்பினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர்தர மாணவர்களின் நன்மை கருதி அவர்கள் பரீட்சை எடுக்கும் காலம் வரை இலவச வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

இவ்வருடம் யூன் மாதம் பரீட்சை எடுக்கும் மாணவர்களின்நலன் கருதி பின்னூட்டல் வகுப்புக்கள் திருகோணமலை, கிண்ணியா, மூதூர் பகுதிகளில் நடத்தப்படவுள்ளது. வர்த்தக, விஞ்ஞானம், கணித பிரிவுகளுக்குத் தோற்றவுள்ளவர்கள் இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ள முடியுமென கல்வி அபிவிருத்தி அமைப்பின் இணைப்பாளர் க.தங்கராசா தெரிவித்தார்.

## வடிசாலைப் பொறித்தொகுதி புதுக்குடியிருப்பில் திறந்துவைப்பு

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்ட ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்திற்கான வடிசாலைப் பொறித்தொகுதி புதுக்குடியிருப்பு அந்தோனியார்கோவில்வீதியில் இணையத்தின் சொந்தக்காணியில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 22ஆம்திகதி பகல் 12-10 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

முல்லை மாவட்ட ப. தெ. வ. அ. கூ. ச. இணைய பொது முகாமையாளர் சி. வேதவனம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி வேழினி ஏற்றி வைக்க, தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றி வைத்தார். கூட்டுறவுக் கொடியை முல்லை மாவட்ட கூட்டுறவுச்சபைத்தலைவர் மரியராசா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொறித்தொகுதியின் கட்டடத்தை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம் நாடாவை வெட்டித்திறந்து வைக்க, பொறித்தொகுதியினை முல்லை மாவட்ட த. பு. க. பணியாளர் மூர்த்தி ஆரம்பித்து வைத்தார். (8)

## வவுனியா கிராமப்புறங்களில் 90 வீதமானோர் சட்டவிரோத மின்சாரப் பாவனை

### -விசேட நடவடிக்கைகளுக்குப் பணிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தின் கிராமப்புறங்களில் 90 வீதமானவர்கள் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பாவிக்கின்றார்கள் என்பது கணிப்பீடு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை வவுனியா பொலிஸ் அத்தியட்சருக்குச் வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் விசேட பொலிஸ் குழுவினரை நியமித்து, மின்சாரசபையினருடன் இணைந்து கிராமப்புறங்களில் தேடுதல் வேட்டை நடத்துமாறு வவுனியா பொலிஸ் அத்தியட்சகருக்கு நேரடியாக உத்தரவிட்டுள்ளார்.

களவாக மின்சாரத்தைப் பாவிக்கும் குற்றவாளிகளுக்கு ஐயாயிரம் தொடக்கம் பத்தாயிரம் ஆயிரம் ரூபா வரையில் தண்டம் விதிப்பதற்கும், ஆறுமாத சிறைத் தண்டனை விதிப்பதற்கும் சட்டத்தில் இடமிருப்பதாகச் சுட்டிக்காட்டிய நீதிபதி எம்.இளஞ்செழியன் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு தண்டப்பணத்தையும், நஷ்டயீட்டையும் செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கியதோடு தொடர்ந்தும் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் சிறைத்தண்டனை வழங்கப்படுமென எச்சரிக்கை செய்துள்ளார்.

சட்டவிரோத மின்சார பாவனை காரணமாக 2001 முதல் 2003 வரையிலான இரண்டு ஆண்டு காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளார்கள். இக்காலப்பகுதியில் வவுனியா நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட கடுமையான உத்தரவையடுத்து பொலிசாரும், இலங்கை மின்சார சபையினரும் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக 2003 தொடக்கம் இவ்வாறான மரணங்கள் குறைந்திருந்ததாகவும் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.மீண்டும் இப்போது சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகிக்கத் தொடங்கியிருப்பதனால் குற்றவாளிகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் சலுகைகள் காட்டப்படமாட்டாது என்றும் எச்சரிக்கை செய்துள்ளார். (21)

## வீணாக வெளியேறும் நீரைப் பயன்படுத்தி வெலிக்கண்டல் வெளியில் நெற்செய்கைக்கு அனுமதி

### -நீர்ப்பாசனப் பிரதிப்பணிப்பாளர் அறிவிப்பு

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வெலிக்கண்டல் வெளியில் விவசாயிகள் கட்டுப்பாடாக நெற்செய்கையை மேற்கொள்ளலாமென நீர்ப்பாசனப் பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை மழை காரணமாக வீணாகப் போகும் தண்ணீரைப் பயன்படுத்தி இங்குள்ள விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்ளலாம் எனவும் வாய்க்கால்களில் கட்டுமானங்கள் இன்மையால் தண்[illegible]ரைக் கட்டுப்படுத்த முடியாத [illegible] இருக்கின்றதெனவும் உற்பத்[illegible] மேற்கொண்டு தண்ணீரைப் [illegible] எனவும் தெரிவித்துள்ளதோ[illegible] குளபு[illegible]மைப்பு ஏனைய க[illegible]ளைப் [illegible] முடிவுற்றதும் [illegible]ண்டு மூன்று வருடங்களில் விவசாய நடவடிக்கைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ள முடியும் என்று கூறினார்.

குளப்புனரமைப்பு முடியும் வரையும் சிறுபோக நெற்செய்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் எனவும் தெரிவித்த[illegible] குளத்தில் கட்டுமான வேலைகள் [illegible]ாத காரணத்தால் தண்[illegible] ஆ[illegible] ஊடாகக் கடலுக்குப் பாய்வதை த[illegible]ந்து வெலிக்கண்டல் வெளியில் நற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாமென மேலும் தெரிவித்துள்ளார். நெற்செய்கையை விரைவாக மேற்கொள்ளுமாறும் ஆலோசனை தெரிவித்துள்ளார். (46)

## புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

( மன்னார்)

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ்க்[illegible]வன் பாடசாலையில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் பாடசாலை அதிபர் ஜெயதாஸ் மிராண்டா தலைமையில் இடம்பெற்றது. இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை மன்னார் மாவட்ட அரச அதிபர், விஸ்வலிங்கம், வலயக் கல்விப்பணிப்பாளர் ஆர்பட் ரெவ்வல், பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் நாட்டினார்கள்.கட்டட நிர்மாணத்திற்கென நிகொட் நிறுவனம் 30 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (18)

## ஆற்றுப்படுத்தல் மேம்பாட்டுப் பயிற்சிநெறி வெண்புறா-யுனிசெவ் இணைந்து முன்னெடுப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் இயங்கிவரும வெண்புறா நிறுவனம் யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து பௌதீக ஆற்றுப்படுத்தல் மேம்பாட்டுப் பயிற்சிநெறி வகுப்புக்களை நடாத்தியுள்ளது. கடந்த 28ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை கிளிநொச்சியிலுள்ள வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தித் தொழில்நுட்ப நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இப்பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்றது. இறுதி நாளன்று பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுடன் நிறைவுபெற்றது.

பயிற்சிநெறி உளவளத்துணை ஆற்றுப்படுத்துகைப் போதனாசிரியர் தங்கத்துரை பயிற்சியாளர்களுக்கான விரிவுரைகளையும், பயிற்சிகளையும் வழங்கி



னார். சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வெண்புறா நிறுவனப் பணிப்பாளர் சுந்தரமும், நிர்வாக உத்தியோகத்தர் சந்திரசேகரமும் கலந்து சிறப்பித்தனர். இப்பயிற்சி நெறியில் 16 பயனாளிகள் கலந்துகொண்டனர்

# முள்ளியவளை மேதின நிகழ்வில்...





படங்கள்- வீ.பிரதீபன், தவரட்ணம்

# மல்லாவி மேதின நிகழ்வில்...





படங்கள்- இ.சசிக்குமார்,கலாவரன்

# தொடரும் படு கொலைகளுக்கு சந்திரிகாவே முழுப் பொறுப்பு

*யாழ். ஊடகவியலாளர் சங்கம் சந்திரிகாவிற்கு கண்டன மடல்*

(யாழ்ப்பாணம்)

**நடைபெற்றுவரும் படுகொலைகள் யாவற்றிற்கும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவே பொறுப்பு என யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் சந்திரிகாவிற்கு அனுப்பிவைத்துள்ள கண்டன மடலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் வருமாறு;**

அம்மணி! தமிழ் பத்திரிகையாளர்களைப் படுகொலை செய்யும் கலாச்சாரம் உங்களது ஆட்சியில் தொடர்ந்த வண்ணம் உள்ளது. முதலில் நிமலராஜனையும் பின்னர் நடேசனையும் இறுதியாக (தராக்கி) சிவராம் அவர்களையும் படுகொலை செய்துள்ளீர்கள். இந்தக் கொலைகள் அனைத்திற்கும் நீங்களே முழுப் பொறுப்பும் ஆகும். உங்களால் அரவணைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதக்குழுக்களையும், உங்களது படையினரது புலனாய்வுத் துறையினரையும் பயன்படுத்தி இந்தப் படுகொலைகளை அரங்கேற்றி வருகின்றீர்கள். எனவே தொடரும் படுகொலைகளை நிறுத்தி நேர்மையுடன் நடக்குமாறு உங்களைக் கேட்பதுடன், இத்தகைய படுகொலைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (33)

## வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

யாழ். குடாநாட்டில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்கள் பலவற்றிலும் பயின்றுவரும் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்வதன மூலம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் நடவடிக்கைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில் யாழ். குடாநாட்டில் இயங்கிவரும் பாடசாலைகள், தொழில நுட்பக்கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கி வருகின்றது.அத்துடன் இத்தகைய கல்வி நிறுவனங்களின் நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கியினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

## சட்டவிரோத மண் அகழ்வோரால் காணி உரிமையாளர்கள் அச்சம்

யாழ். மந்துவில் பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபடுவோரினால் காணி உரிமையாளர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் உரிமையாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

அண்மையில் காணி ஒன்றில் இரவு வேளையில் மண் அகழப்படுவதை தடுக்க முற்பட்ட காணி உரிமையாளரை மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த குழுவினர் மண்வெட்டி, சவல் போன்றவற்றால் தாக்க முற்பட்டுள்ளனர்.

போர் நிறுத்த காலத்தில் யாழ் குடா கோகிலா கண்டி,தச்சன் தோப்புப் பகுதியில் ஒருவரும் கெற்பெலி பகுதியில் ஒருவருமாக இரு காணி உரிமையாளர்கள் சட்ட விரோத மண் அகழ்வு கும்பலினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது (28)

## மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகள் பாடசாலை சமூகம் பலத்த கண்டனம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப்பகுதியில் பாடசாலை மாணவர்களைக் கண்டதும் பேருந்துகள் நிற்காமல் செல்வது குறித்து பாடசாலை சமூகம் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் பாடசாலை விட்டதுடன் இப்பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள தமது வீடுகளுக்குச் செல்ல பேருந்து தரிப்பிடத்தில் நீண்ட நேரம் காத்து நிற்பதாகவும் மாணவர்கள் கூட்டமாக நிற்பதை அவதானிக்கும் பேருந்து ஓட்டுநர்கள், பேருந்தை பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தாமல் தூரநிறுத்துவதாகவும் மாணவர்கள் பேருந்தை நோக்கி ஓடிச்செல்கின்றபோது பேருந்தை வேகமாக எடுத்து செல்வதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (28)

## தென்மராட்சி படை நிலைகளைப் பலப்படுத்த பயன்தரும் மரங்கள் படையினரால் அழிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் தமது படை முகாம் காவலரண்களை பலப்படுத்த பனை, தென்னை மரங்களை வெட்டியழித்து வருகின்றனர். அத்துடன் கேணிகள், தூரவுகள்,குளங்கள் போன்ற நீர் நிலைகளைத் தூர்த்தும் வருகின்றனர். இதனால் சுற்றுச் சூழல் பாதிப்படையும் அபாயம் எதிர் கொள்ளப்பட்டு வருவதுடன் பயன்தரு வழங்களும் அழிவடைவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (28)

—யாழ். குடாநாட்டில்—

## சுனாமி பேரலை தாக்கத்தால் 6811 குடும்பங்கள் பாதிப்பு

சுனாமி ஆழிப் பேரனர்த்தம் காரணமாக யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 6811 குடும்பங்கள் நேரடியான பொருளாதாரப் பாதிப்புகளை எதிர் கொண்டிருப்பதாக சுனாமி அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்பு செயலணித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நேரடியான பொருளாதாரப் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ள குடும்பங்களில் அதிகளவானவை கடற்றொழிலாளர்களின் குடும்பங்களாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

எனவே இவ்வாறு பொருளாதாரப் பாதிப்புகளை நேரடியாகச் சந்தித்துள்ள 6811 குடும்பங்களினதும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படுவது அவசியமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.இதைவிட 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மறைமுகமான பொருளாதாரப் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

## தவசிகுளம் வீதி புனரமைக்காமையால் அப்பகுதியினர் பெரும் அசௌகரியம்

ஆயிரம் குடும்பத்திற்கு மேல் வசிக்கும் கொடிகாமம் பிரதேசத்திலுள்ள பெரிய கிராமமான தவசிகுளம் கிராமத்தின் பிரதான போக்குவரத்து வீதியை உடனடியாக புனரமைத்துத் தரும்படி கிராம துரித அபிவிருத்திச் சபையினர் பல்வேறு தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பல வருடங்களாக புனரமைக்கப்படாமலுள்ள இவ் வீதியை பயன்படுத்தும் பொது மக்கள் பல அசௌரியங்களை எதிர்நோக்குவதாகவும் நூற்றுக்கணக்கான மாணவர் இப்பிரதேசத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கு இவ் வீதி வழியாகவே சென்று வருவதாகவும் இப்பிரதேச துரித அபிவிருத்தி சபையினர் தெரிவிக்கின்றனர். (28)

# சந்திரிகா கரைசேர வழியுண்டா?

1974 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்து சிறிமாவோ அம்மையாரை அழிக்க ஆளும் கட்சிக்குள்ளேயே சூழ்ச்சி நடப்பதாக அன்று ஜே.ஆர். ஜயவர்த்தனா பாராளுமன்றத்தில் தெரிவித்ததை யார் மறந்தாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மகுடத்துக்கு வாரிசான அநுரா பண்டாரநாயக்க மறந்திருக்க மாட்டார். **எனினும் அப்போது இளைஞராக** இருந்த அநுரா பார்வையாளர் கலரியிலிருந்தே இதனை அவதானித்தார். பின்னர் உபாலி விஜயவர்த்தனாவின் வீட்டில் ஜே.ஆரைச் சந்தித்து அதன் உண்மையை விளங்கிக் கொண்டார். அத்துடன் நின்று விடாமல் அந்தச் சூழ்ச்சியை முறியடிக்கத் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

சிறிமாவுக்கு எதிராக நடைபெற்ற சூழ்ச்சியானது பண்டாரநாயக்க குடும்பத்தின் மூத்த மருமகனான குமார் ரூபசிங்கவை பகடைக்காயாகப் பயன்படுத்தி இடதுசாரிகள் சிறிமாவையும், அவரது கட்சியையும் அழிக்கச் செய்த சூழ்ச்சியாகும். அந்த சூழ்ச்சிக்குச் சில ஆளும் கட்சி அமைச்சர்களும் உடந்தையாக விருந்தனர். அதில் பிரதம பங்கு வகித்தவர் அப்போதைய நிதியமைச்சராகவிருந்த என்.எம். பெரேராவாகும். அக்காலப்பகுதியில் உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்திருந்தது. அதனைப் பயன்படுத்தி என்.எம்.பெரேரா பொருட்களினதும், எரிபொருளினதும் விலையைப் பன்மடங்கு உயர்த்தினார். எனினும் அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகளின் தயவினால் எரிபொருள் இறக்குமதியில் சிறு மானியம் வழங்கப்பட்டது. எனினும் இந்தத் தயவை விரும்பாத பெரேரா ஏகாதிபத்தியவாதிகள் ஒழியட்டும் சோசலிசம் வளரட்டும் எனக் கோஷமிட்டு அந்த மானிய உதவியை நிராகரித்தார்.

இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது. இதனால் பொதுமக்கள் சிறிமா மீதும், அரசு மீதும் வெறுப்பைக் காட்டினர். இது சிறிமா வோவை கவிழ்க்க என்.எம் பெரேரா எடுத்தமுதல் நடவடிக் கையாகும். இந்நடவடிக்கை மூலம் மக்களை சிறிமாவுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்து, கட்சிக்குள் முரண்பாட்டை உருவாக்கி அரசுக்குள் ஒரு புரட்சியை ஏற்படுத்த சூழ்ச்சிக் காரர்கள் திட்டமிட்டனர். எனினும் இந்தத் திட்டத்தை அநுரா முறியடித்தார். அதற்காக அவர் நடவடிக்கையில் ஈடுபட்ட போது அநுரா ஐ.தே. கட்சியின் ஒப்பந்தக்காரராகச் செயற்படுவதாகச் சில பகடைக் காய்களாகச் செயற்பட்ட சிறிலங்காசுதந்திரக்கட்சி அமைச்சர்களும், எம்.பிக்களும் குற்றம் சுமத்தினர். அவ்வாறு அவர் செய்யாதிருப்பின் 17 வருடங்களின் பின்னர் பண்டாரநாயக்க குடும்பத்தில் ஒருவர் நாட்டின் தலைவியாக வந்திருக்கவோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்று ஒன்று நீடித்திருக்கவோ முடியாது.

அன்று அதிகாரத்திலிருந்த அம்மாவைக் காப்பாற்றியது போன்று இன்று அநுராவின் அக்கா அதிகாரத்தில் இருக்கிறார். அவருக்கும் அதே மாதிரியான அச்சுறுத்தல்களும் நெருக்கடிகளும் வந்துகுவிந்திருக்கின்றன. அதற்காக அநுரா என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்பதை நோக்கு முன்பு சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும், நெருக்குதல்களையும் பற்றி முதலில் நோக்குவோம்.


அன்று போலவே இன்றும் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. அத்துடன் பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல சுனாமி என்ற இயற்கை அனர்த்தமும் ஏற்பட்டது. இந்த அனர்த்தங்களின் நட்டத்தை மக்களிடமிருந்து அறவிட முடியாது. மக்களின் பைகளும் வெறுமையாகிவிட்டன. நிதியை வெளிநாடுகளிலிருந்தே பெறவேண்டும்.

வெளிநாடுகளும் வெறுமனே நிதி உதவிகளை வழங்காது. அவை அந்நிதியைப் பயன்படுத்தும்முறை பற்றி அரச விவரித்தால் மட்டுமே வழங்கும். யுத்தத்துக்காக அவை நிதியுதவி வழங்கப்போவதில்லை.

அதே போன்று நட்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களுக்காகவும்வெளிநாடுகள் நிதி வழங்மாட்டாது.

இந்த நிதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே மின்சாரசபை,எரிபொருள் கூட்டுத்தாபனம் என்பவற்றை தனியார் மயப்படுத்த சந்திரிகா எண்ணுகிறார். ஆயினும் ஜே.வி.பி இதனை எதிர்க்கின்றது. அந்த எதிர்ப்பை ஜே.வி.பி தெரிவிப்பதற்கு அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்தவையும், வெளிநாட்டமைச்சர் கதிர்காமரையும் மற்றும் ஊடகத்துறையமைச்சர் மங்கள சமரவீரவையும் பயன்படுத்துகின்றது. எனினும் அரசாங்கத்தை நடத்துவதற்காக ஜே.வி.பியினரை கூட்டணியிலிருந்து பிரிந்து செல்லாமல் பாதுகாப்பவராக அநுரா பண்டாரநாயக்க பணியாற்றுகிறார். இந் நிலைமைகளால் ஏற்படும் விளைவு மக்கள் பட்டினியும் மறந்து மீண்டும் யுத்தம் என்ற நிலைக்குத் தள்ளப்படுவதாகும்.

இதனால் ஏற்படும் நன்மை ஜே.வி.பியை அடையும் .காரணம் விலைவாசி அதிகரித்து மக்கள் வறுமை நிலைக்குள்ளாகும் போது ஜே.வி.பி யினர் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி நடத்த வேண்டும் என்ற கருத்தை மேலோங்கச் செய்யலாம். யுத்தம் ஒன்று ஏற்பட்டால் இராணுவத்திற்கு ஆளணி தேவைப்படும். அதற்கும் ஜே.வி.பி ஆதரவாளர்கள் படையில் இணைய வாய்ப்புக் கிட்டும் . அப்போது இராணுவத்திலும் அவர்களது ஆதிக்கம் அதிகரிக்கும். அதன் மூலம் நாட்டின் அதிகாரம் தானாகவே ஜே.வி.பியினர் வசம் மாறும். அதற்குத் துணைபோகும் அமைச்சர்களினது செல்வாக்கும் உயரும் அப்போது சந்திரிகாவை அகற்றிவிட்டு ஜே.வி.பியினரின் தலையாட்டும் பொம்மைத் தலைவர்களாக அவர்கள் வந்துவிடுவர்.




ஜே.வி. பிக்கு 39 எம்.பிக்கள் இருந்தபோதும் அவர்களின் தலைவராக சுதந்திரக்கட்சி உறுப்பினரை நியமிக்கும் வேலையில் தலையிடவில்லை. அதற்குக் காரணம் சந்திரிகாவுக்கு உள்ள அதிகாரதமாகும். இல்லையேல் கூட்டணியமைக்கப் பெரிதும் உதவிய கதிர்காமரை அவர்கள் பிரதமராக்கியிருப்பர். எனினும் பாராளுமன்ற மட்டத்தில் அதனைச் செய்ய முடியாது போனதால் மாகாணசபையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்று முகமாக மேல்மாகாணசபை மீது ஜே.வி.பியினர் கண் வைத்து விட்டனர்.

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
தமிழில்வழுவேல்

மேல்மாகண சபையின் முதலமைச்சரான றெஜினோல்ட் கூரே சந்திரிகாவின் நெருங்கிய நண்பராவார். அவர் அரசியலில் பிரவேசித்தது சந்திரிகாவினதும், விஜயகுமாரதுங்கவினதும் காலத்திலாகும். இவர்கள் மக்கள் கட்சியிலிருக்கும் வேளை அவர்களுக்குப் பின்னால் சென்றவரே கூரே. சந்திரிகா மக்கள் கட்சியை விட்டு விலகி பொதுசன ஐக்கிய முன்னணியை அமைக்கும்போது றெஜினோல்ட் கூரேயும் அவரோடு இணைந்து கொண்டார். கூரேக்குத் தனியான ஒரு கட்சி இருக்கவில்லை. 1988-89 காலப்பகுதியில் சந்திரிகா மீது ஜே.வி.பி பழிவாங்கும் எண்ணத்தைக் கொண்டிருந்தது போல கூரே மீதும் அவர்கள் கண்வைத்திருந்தனர்.

அவற்றை எல்லாம் மறந்து சந்திரிகா ஜே.வி.பி னருடன் நட்புறவு கொண்டபோது கூரேயும் ஜே.வி.பியுடன் நட்புக்கொண்டார். அதேபோன்று சந்திரிகாவை இப்போது முரண்படும்போது கூரேயும் ஜே.வி.பி மீது முரண்பட்டுள்ளார். அதனால் ஜே.வி.பியினரின் தாக்குதல் பட்டியலில் முதலாமிடத்தை றெஜினோல்ட் கூரேபிடித்திருக்கிறார். சந்திரிகாவைப் பாதுகாக்கும் விதத்திலும், ஜே.வி.பியை எதிர்க்கும் வகையிலும் சந்திரிகாவின் ஆட்களை அழிக்கும்நடவடிக்கையைப் பரீட்சித்துப் பார்க்கும் முதல் நடவடிக்கைக்குள் கூரே அகப்பட்டுவிட்டார். அதேபோல ஜே.வி.பியினர் தமக்கு முக்கியமாகத் தேவைப்படுவோரை இனங்கண்டு அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்து சந்திரிகாவுக்கு எதிராக செயற்படச் செய்யவும் முயற்சிக்கின்றனர்.

இந்த நிலையில் சந்திரிகாவும் கட்சியும் கூரேயைக் கைவிட்டால் அதன் நன்மை ஜே.வி.பி க்குக் கிடைத்துவிடும். ஜே.வி.பி. தனது ஆதரவாளர் ஒருவரை முதலமைச்சராக நியமிக்கும். அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் கைவைக்கும். அதனை ஆரம்பிப்பது டிலான் பெரேரா மூலமாக இருக்கலாம். டிலான் பெரேராவும் றெஜினோல்ட்டைப் போல சந்திரிகாவுக்கு மிகவும் வேண்டப்படும் அரசியல்வாதியாவார். இந்தத் திட்டங்கள் வெற்றியளிக்குமாயின் அடுத்து அமைக்கப்படும் அரசாங்கத்தில் ஜே.வி.பி உறுப்பினர் பிரதமராவார். அடுத்ததாக சனாதிபதி வேட்பாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் இவர்களின் விருப்பப்படியே தெரிவு செய்யப்படலாம்.

இந்த நிலையில் தற்போது சந்திரிகா பெரும் பிரச்சினைக்குள்ளாகியுள்ளார். றெஜினோல்ட் கூரேயைக் கைவிட்டால் தமக்கு ஆபத்து எனக் கருதியே அவர்களுக்கெதிராகக் கொண்டுவரவிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாத வண்ணம் சந்திரிகா சபையை ஒத்திவைத்துள்ளார். எனினும் தற்போதைய பிரச்சினைக்கு அது தீர்வாகாது. சுனாமி நடவடிக்கைகள் மின்சாரசபை, எரிபொருள் கூட்டுத் தாபனம் என்பனவற்றைத் தனியார் மயப்படுத்தலை அவரால் தள்ளிவைக்க முடியாது. இந்த வகையில் மேல்மாகாணசபை, தனியார் மயப்படுத்தல், பொதுக் கட்டமைப்பு என மும்முனைப் போட்டியில் அவர் சிக்கியுள்ளார். சிக்கவைத்திருப்பதும் அவருக்கு ஆதரவளிக்கும் ஜே.வி.பியினரே.

தற்போது அவருக்கு ஐ.தே. கட்சியிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதா, ஜே.வி.பியிடமிருந்து தனது தலைமைப் பதவியையும், கட்சியையும் பாதுகாப்பதா என்ற நிலையில் உள்ளார். இவையிரண்டிலும் ஒன்றைத் தெரிவு செய்யவேண்டும். இரண்டிலுமே வெற்றி கண்டால் மட்டுமே அவர் கரைசேருவார்.

## 21.

• ஈராக்கில் பல்கேரியக் கம்பெனிக்குச் சொந்தமான உலங்குவானூர்தியை தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தியதில் 11பேர் பலி; இச்சம்பவம் தொடர்பாக 10 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

• இந்தியாவின் அகமதாபாத்தில் வதோரா மாவட்டத்தில் சபர்மதி கடுகதிரயில் சாமாலியா என்னும் கிராமத்தின் அருகே நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 100பேர் பலி ; 200 பேர் காயம்.



• சவுதி நகரான மக்காவின் எல்லைப் பகுதியில் பாதுகாப்புப்படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் கடும் து சண்டை இடம்பெற்றதில் நான்குபே

• சவுதிஅரேபியா உள்ளூராட்சி மன்றத்தேர்தல் இடம்பெற்றது.

• தென்மேற்கு சீனாவிலுள்ள இரசாயனத் தொழிற்சாலையொன்றில் இடம்பெற்ற பாரிய வெடிவிபத்தில் மூன்று மாடிகளைக் கொண்ட அத்தொழிற்சாலை இடிந்து விழுந்ததில் 19 பேர் பலி; 10 பேர் காயம்.

• ஆப்கானின் தென்கிழக்கிலுள்ள தீவிரவாதிகளின் நிலைகள் மீது அமெரிக்கப்படைகள் தாக்குதல் நடத்தியதில் 12 தீவிரவாதிகள் பலி.

• புருண்டி இராணுவத்திற்கும் ஹூட்டு தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி.

• நேபாளத்தின்முன்னாள்அமைச்சர் பிரகாஷ்மான்சிங் நேபாளப்பொலிசாரால்கைது.

• ஈராக்தலைநகர் பாக்தாத்திற்கு கிழக்கே சல்ராபார்க்கிற்கு அருகில் ஈராக் இடைக்கால பிரதமரை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

## 22.

• ஒன்பது ஜோர்தானிய சிறைக்கைதிகளை இஸ்ரேலிய அரசு விடுதலைசெய்தது. இஸ்ரேலிய அரசும், ஜோர்தான் அரசும்அண்மையில் ஏற்படுத்திக் கொண்ட சமரச உறவினை மேலும் வலுப் படுத்தவே இச்சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

• இஸ்ரேலியத் தலைநகர் டெல்அவிவில் பலஸ்தீனதற்கொலைக் குண்டுதாரியொருவர் மேற்கொண்ட தாக்குதலில் நான்குபேர் பலி; 50 இற்கும்மேற்பட்டோர் காயம்.

• ஐம்பதாவது ஆசிய ஆபிரிக்க மாநாடு இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த் தாவில் ஆரம்பம் இந்த மாநாட்டில் 80 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



## 23.

• மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற பிரகாஷ்கரத் தமிழ்நாட்டில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரான தி.மு.க.தலைவர் கருணாநிதியை சந்தித்து ரையாடியுள்ளார்.



• இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் இடம்பெற்றுவரும் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் நேபாள மன்னர் ஞானேந்திராவை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசியுள்ளார்.






### 21.04.2005-27.04.2005

• இந்தியாவின்உத்தரப் பிரதேசத்திலுள்ள மொரினா எனுமிடத்தில்பக்தர்களை ஏற்றிச் சென்ற பாரவூர்திமலைப்பாதையில் உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானதில் 23 பேர் பலி; 38 பேர் காயம்.



## 24.

• ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள உசேனியா அல்பெய்த் மசூதி மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 23 பேர்பலி; 40 பேர் காயம்.

• சீனாவின் வடபகுதியிலுள்ள ஜிலின் மாகாணத்தில் ஜியாசிப் பகுதியிலுள்ள சுரங்கத்தில் வெள்ளம் புகுந்ததில் 60 பேர் சிக்கினர்.

• கத்தோலிக்கத்திருச்சபையின் புதிய பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட16 ஆம் ஆசிர்வாதப்பர் தனது கடமையைப் பொறுப்பேற்றார்.



• துருக்கி ஒட்டோமன் ஆட்சிக்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்ட 90 ஆவது வருடாந்த நினைவு தினம் ஆர்மேனியர்கள் அனுஷ்டிப்பு.

• ஜேர்மனியிலுள்ள புளசென்பேர்க் சிறைக்கூடம் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது மீட்கப்பட்ட 60ஆவது வருடாந்த நினைவுதினம்அனுஷ்டிப்பு.

• தாய்லாந்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் தென்பகுதியில் குண்டு வெடித்ததில் இரண்டு பேர் பலி; மூவர் காயம்.

• ஈராக்கின் திக்றிட் நகரிலுள்ள பொலிஸ் பயிற்சி நிலைய வளவில் இரு கார்க்குண்டுகள் வெடித்ததில் ஏழுபேர்பலி; பலர் காயம்.



• 1971 ஆம் ஆண்டில் ஒஸ்கார் விருதுபெற்ற இங்கிலாந்து நடிகர் ஜோன்மில்ஸ் ரியான்ஸ் 97 ஆவது வயதில் மரணம்.

• ஈராக் தலைநகர் பாக்தாத்தில் விமான நிலையப்பாதையிலுள்ளஅமெரிக்கப் பாதுகாப்புப் பகுதியிலும் அடிகிராப் சிறைச்சாலையிலும் இடம்பெற்ற கார்க்குண்டுத்தாக்குதலில் 10 பேர் பலி.

## 25.

• ஜப்பானின் மேற்குப்பகுதியிலுள்ள சுமகா சாகிப் பகுதியில்அதிவேகரயில் வண்டி மாடிக் கட்டடம் ஒன்றில்மோதியதில் 104 பேர் பலி; 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்.



• ஈராக்கின் கிர்குக்கில் தீவிரவாதிகளினால் எண்ணெய்விநியோகக் குழாய் தீவைக்கப்பட்டது.



• ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகம் கோபிஅனான் புதுடில்லி விஜயம்.



• ரஷ்யாவின் கொய்ஸ்விண்வெளிஓடம் கஜகஸ்தானில் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டது.

• இஸ்ரேலின் முன்னாள் சனாதிபதி இஸெர்வீஸ்மன் 80 ஆவது வயதில் மரணம்.

• அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில் முதலாம் உலகப்போர் நினைவுநாள் அனுஷ்டிப்பு இவ் உலகமகாயுத் தத்தின்போது துருக்கியின் கலிபோலியில் அவுஸ்திரேலிய நியூசிலாந்து துருப்புக்கள் வந்திறங்கிய நினைவுநாளாகும்.

• 'லக்ஷியா' எனும் ஆளில்லாத வேவு விமானம் ஓரிசாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது. 30 முதல் 35 நிமிடங்கள் மட்டுமே பறக்கக்கூடியது. இவ் விமானம் தரையிலிருந்து ரிமோட் கொண்ரோல் மூலமே இயக்கப்படும்.

• சவுதியின் முடிக்குரிய இளவரசர் அப்துல்லா அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஐ டொக்ஸாஸில் சந்தித்து ரையாடியுள்ளார்.

• இந்தியாவின் வடமாநிலங்களில் கடும் வெப்பம் காரணமாக 28 பேர் உயிரிழப்பு.

## 26.

• அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலிசாரைஸ் லத்தின் அமெரிக்காவுக்கான ஐந்துநாள் விஜயமொன்றை ஆரம்பித்தார்.

• இந்தியாவில் சூப்பர் ஜம்போஜெட் ஏ.380 விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது. 280 தொன் எடையுள்ள இந்த விமானம் 550 இருக்கைகளைக் கொண்டது.




• இந்தோனேஷியாவிலுள்ள சுமாத்திராத்தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.1 புள்ளியாகப் பதிவானது.

• இந்தியா,கேரளா மாநிலத்தின் காசர் போடு மாவட்டத்தில் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவினால் ஒன்பது பேர் பலி.

• லெபனானில் 29ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த சிரியப்படைகள் லெபனானை விட்டு முற்றாக வெளியேற்றம்.



## 27.



• நேபாள முன்னாள் பிரதமர் சேர்பதுர்சேப கைது.

• ஜப்பானுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய 42 பேர் சீன அரசினால் கைது.

# சிவராமின் இழப்பு வேதனைக்குரியது அமெரிக்கப் பிரதிநிதி கவலை தெரிவிப்பு

ஊடகவியலாளர் சிவராமின் இழப்பு மிகவும் வேதனைக்குரியதொரு விடயமென அமெரிக்கத் திட்டமிடல் மற்றும் சர்வதேசக் கற்கை நெறிகள் அமைப்பின் தென்னாசியப் பிராந்திய இயக்குநரான திருவாட்டி ரெறிசிரா ஸாபர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவராகவும் கடமையாற்றிய திருவாட்டி ரெறிசிரா ஸாபர் தமிழ்நெற் இணையதளத்திற்கு அனுப்பிவைத்த கவலைக் குறிப்பில், இலங்கையிலுள்ள தலைசிறந்த அரசியல் ஆய்வாளர்களிலொருவரான சிவராமை நான்நன்கு அறிவேன். தனது சுயாதீனக் கருத்துக்களிற்காக போராடி வந்ததுடன், அவற்றை செயற்படுத்தியும் வந்த ஒரு ஊடகவியலாளன் சிவராம் எனக் குறிப்பிட்டுள்ளதோடு, தமிழ்ச் சமுதாயத்திற்கும், இலங்கைத் தீவிற்கும் சிவராமைப் போன்றோரே தேவையெனவும், சிவராமின் இழப்பானது மிகவும் வேதனைக்குரியது என்பதோடு, அவரைக் கொன்றவர்கள் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பாரிய தீங்கை இழைத்திருக்கிறார்கள் என்றும் அக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# உயர்நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புகள் இணையதளத்தில்

உயர்நீதிமன்றத்தின் வழக்குகளின் தீர்ப்புகளை இணையதளத்தில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக உலக வங்கி நிதியுதவியை வழங்கவுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள், உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை உரியவகையில் தெரிந்து கொள்ள முடியும் என நம்பப்படுகிறது. (32)

# 30 பேரிடம் விசாரணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 30 பேரிடம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிவராம் கடத்தப்பட்டபோதும் சம்பவத்தை நேரில்கண்ட சிலரிடமிருந்து இது தொடர்பான தகவல்கள் கிடைத்ததாக கொழும்பு பொலிஸ் குற்றப்பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சரத்துகேகொட தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இந்தக் கடத்தல் சம்பவத்துடன் சிலர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிணற்றில் குதித்தவரை மீட்க முயன்றவர் பலி!

(கொழும்பு)

சிலாபம் லுனவிலப் பகுதியில் கிணறு ஒன்றில் குதித்த ஒருவரை மீட்கக் குதித்த மூவரில் ஒருவர் உயிரிழந்தார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாகத் தந்தையுடன் முரண்பட்ட மகன் கிணற்றில் பாய்ந்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இதனையடுத்து அவரைக் காப்பாற்ற அவரின் தந்தையும் அதற்குப் பின்னர் அவரைக் காப்பாற்ற மேலும் இருவர் அடுத்தடுத்து கிணற்றில் பாய்ந்துள்ளனர். இந்த நிலையில் முதலில் பாய்ந்தவரைக் காப்பாற்றுவதற்காக கிணற்றில் பாய்ந்த அயல் வீட்டுக்காரர் சம்பவத்தில் இறந்துள்ளார். ஏனைய மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# நோர்வே உதவும்

(கொழும்பு)


நோர்வே தொடர்ந்தும் மலையகத் தோட்டப்புற அபிவிருத்திக்கு உதவுமென நோர்வே நாட்டின் தூதர் ஹான்ஸ் பிரஸ்கர் தெரிவித்துள்ளார். தொண்டமான் தொழிற்பயிற்சி மையத்தில் பயிற்சிகளைப் பெற்ற 196 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய நோர்வே தூதர் 1995 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கம் கேட்டுக்கொண்டமைக்கு அமைய நோர்வே நாடு 130 மில்லியன் டொலர்களை இந்தத் தொழிற்பயிற்சி மையத்திற்கு வழங்கியது.

இதன் மூலம் இன்று மலையக இளைஞர்கள் பலர் பயிற்சிகளைப் பெற்று வெளியேறியுள்ளனர். அதுவும் அவர்கள் தமது சொந்த மொழியில் இந்தப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இதேவேளை நோர்வே நாட்டு அரசாங்கம் தொடர்ந்தும் மலையகத் தோட்டப்புற அபிவிருத்திக்கு உதவியளிக்கும் அதேநேரம் நாட்டின் சமாதானத்துக்கும் அது பாடுபடும் எனத் தெரிவித்தார்.


## ஓராண்டின் ஓயாத நினைவுகள்...

பிறப்பு 1977 - 10 - 19




வீரச்சாவு 2004 - 05 - 02

கடலன்னை தத்தெடுத்த
கண்மணியாம் எங்கள் முத்தே!
ஆண்டொன்று ஆன போதும்
ஆறிடுமா எங்கள் நெஞ்சே!

கள்ளமில்லா உன்சிரிப்பை
காண மனம் ஏங்குதடா
கனிவான உன் வதனம் - நெஞ்சில்
வந்து வந்தே போகுதடா!

குடும்பத்தினர், (அ.கிறிஸ்ரிருபன்)
213, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

(5921)

## 45ஆம் நாள் நினைவுலகில்

தாயின் மடியில் 22 - 04 - 1962



பாவியின் அடியில் 19 - 03 - 2005

## சந்திரசேகரம் ஜெயபாலு

தாயன்பை உன்னிடம் கண்டோம்
தந்தை நிழலையுன்னிடம் தேடினோம்
உன் அன்பை இனியாரிடம் காண்போம் – அண்ணா
உனை எம்மிடமிருந்து பிரித்தானே யொரு பாவி

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
சகோதரிகள்.

வள்ளிபுனம்,
அத்தார் குடியிருப்பு. (6091)


-ஆழிப்பேரலை நிவாரண உதவியாக-

# சிறிலங்காத் தூதரகங்கள் ஊடாக ரூ 600 மில்லியன் கிடைத்தது!

-அமைச்சர் கதிர்காமர் தகவல்

(கொழும்பு)

பல்வேறு நாடுகளிலுள்ள சிறிலங்காத் தூதரகங்களின் ஊடாக சுமார் 600 மில்லியன் ரூபாவை ஆழிப்பேரலை நிவாரணமாக அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

பல தரப்பட்ட நன்கொடையாளர்கள் தங்களது நிதியில் சிறிலங்காத் தூதரகங்களில் கொடுத்து உதவுவதாக அவர் தெரிவித்தார். காலியில் வளந்துவையில் வீட்டு நிர்மாணத்திட்ட ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியைக் கொண்டு 250 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டங்கள் நான்கினை நடைமுறைப்படுத்த உத்தேசித்திருப்பதாக அமைச்சர் கூறினார். இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பிரதேசங்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)


CARITAS-HUDEC KILINOCHCHI

## VACANCY
## Field Officer

CARITAS-HUDEC is a **Humanitarian Organization.**
Within the framework of its 2 years program for relief after tsunami disaster.
CARITAS-HUDEC needs a field officer based in his office of kilinochchi.

**Job description**
Integrated to the Tsunami Team, he will report directly to the Field Coordinator. He Will assist in the **implementation** and **follow-up** of the construction part of our relief program in Vanni area

***Requirements***

- Good experience as Field Officer
- Building construction knowledge
- Good drawing skills
- Fluency in English
- Ability to work on the field and fravel extensively
- Good communication skills
- Good team player
- Computer skills (word, excel, internet...)
- Diving License

please send your application (CV& cover letter in English) by Friday 06 th of May to:

Director Father peter
CARITAS-HUDEC Kilinochchi
Thirunaga[illegible] linochchi

please specify the post you apply for on y[illegible]r application

(சி.11821)

CARITAS-HUDEC KILINOCHCHI
**VACANCY**
**Operational Program Coordinator**

CARITAS-HUDES is a **Humanitarian organization.**
Within the tramework of its 2years program tor relief after tsunami disaster,
CARITAS-HUDEC needs a field officer based in his office of kilinochchi.

**Job description**
Integrated to the Tsunami Team, he will report directly to the Director and work closely with the program Adviser. In charge of the **implementation** and **follow-up** of the overall tsunami relief program in vanni area, he will be responsible of the set up under the CARITAS-HUDEC strategy.
He will **supervise** and **coordinate** a team of about 15 people.

**Requirements**

- Strong experience in program coordination
- Fluency in English
- Ability to work on the field and travel extensively
- Good management skills
- Good communication skills
- Good team player
- computer skills (word,excel, internet...)
- Driving License

please send your application (CV& cover letter in English) by **Friday 06 th of May** to:

Director Father peter
CARITAS-HUDEC Kilinochchi
Thirunagar,Kilinochchi

please specify the post you apply for on your application

(சி.11821)

# United Nations Development Programme
## Sustainable Human Development

U N
D P

UNDP is the UN's global development network advocating for change and connecting countries to knowledge, Experience and resources to help people build a better life . We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range partners

The UNDP Transition Programme is UNDP's flagship recovery and sustainable development programme, supporting the peace process through the creation of livelihoods and revitalized growth of local economies in areas directly and indirectly affected by conflict. The government of Sri Lanka and the UNDP Transition Programme work in partnership to ensure that the programme provides maximum support to the government ongoing development initiatives.

### SENIOR PROGRAMME OFFICER

***Under the supervision of Field Coordinator***

- Programme management and advisory services and supervision of Programme Unit;
- Administration and implementation Programme Strategies, adopt process and procedures;
- Support in creation of strategic partnerships and implementation of the resource mobilization;
- Facilitation of knowledge building and knowledge sharing;
- Establishment of management target and evaluation and monitoring;
- Strategic oversight of planning budgeting, implementing and monitoring the projects , tracking use of financial resources in accordance with UNDP rules and
- Regulations; Identification of sources of information related to policy driven issues;
- Identification and synthesis of best practices and lessons learned linked to programme goals;
- *Oversee preparation of project proposals and reports;*
- Presentation of information/reports for identification of areas for support and interventions;
- Conduct regular field visits and assess the overall project implementation status and provide corrective measure to be undertaken, as necessary;
- Preparation of project documents, drafts , work plans, Budget proposals on implementation;
- Follow up on performance indicators/success criteria, targets and milestones;
- Analysis the situation in programme , identification of operational and financial problems, development of solutions;
- Participation and support inter-agency cooperation, particularly with other UN agencies, the world Bank Asian Development Bank, as required;
- Represent UNDP and the transition programme as network, donor , interagency and internal meetings as required;
- Analysis of information of donors, preparation of donor's profile and database, establishment of donor counterparts;
- Support audit of Direct Execution (DEX) projects , implementation of audit recommendations;
- Provide on the job training to the programme staff; Contribute of knowledge cnetworks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Educational Background**

- Master's degree preferably with specialised certification in Business or public administration or economics, Political or Social Sciences is required

**Experience**

- 5-7 years of progressively responsible programme experience is required at the national or international level.
- *Experience in Usage of computers and Office Software Packages (MS Word , Excel* etc) and advance Knowledge of spreadsheet and database packages, Experience in handling of web-based management systems.

**Language Requirements**

- Excellent command of English and Tamil
- Ability to communicate in sinhala would be an asset

**Operational; Skills**

- Ability to work as a member of multi disciplinary and multicultural team
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment
- Motivated ,flexible and capable of working under pressure
- Willingness to travel within Sri Lanka
- Willingness to work out of normal office.

### PROGRAMME OFFICER

**Under the supervision of Senior Programme Officer**

- Administration and implementation Programme Strategies, adopt process and procedures;
- Support management of the transition programme;
- Facilitation of knowledge building and knowledge sharing;
- Presentation of researched information for preparation of Transition program me
- projects and proposal;
- Presentation of information/reports for identification of areas for support and interventions;
- Assist in the implementation, monitoring and evaluation of all UNDP support projects;
- Support the implementation of the transition programmes partnerships;
- Conduct regular field visits and assess the overall project implementation status and provide corrective measure to be undertaken, as necessary;
- *Preparation of project documents, drafts , work plans, Budget proposals on* implementation;
- Provision of guidance to the executing agencies on routine implementation of projects, tracking use of financial resources;
- Follow up on performance indicators/success criteria, targets and milestones;
- Analysis the situation in programme , identification of operational and financial problems, development of solutions;
- Participation and support inter-agency cooperation, particularly with other UN agencies, the world Bank Asian Development Bank, as required;

**Educational Background**

- Bachelor's degree preferably with specialised certification in Business or publicad ministration or economics,
- Political or Social Sciences is required

**Experience**

- 3-5 years of progressively responsible programme experience is required at the national or international level.
- Experience in Usage of computers and Office Software Packages (MS Word
- Excel etc) and advance Knowledge of spreadsheet and database packages,
- Experience in handling of web-based management systems.

**Language Requirements**

- Excellent command of English and Tamil
- *Ability to communicate in sinhala would be an asset*

**Operational; Skills.**

- Ability to work as a member of multi disciplinary and multicultural team
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment
- Motivated ,flexible and capable of working under pressure.
- Willingness to travel within Sri Lanka.
- Willingness to work out of normal office.

### FIELD ENGINEER

**Under the supervision of Senior Programme Officer**

- Developing infrastructure project processes, including project selection criteria, procurement and Payments;
- Responsible for implementation of the infrastructure projects at the district and sub-district level, ensuring that activities in targeted areas are implemented, and partners work comfortably with the established procedures on tendering, contracting and monitoring;
- Provide warning of problems to implementing partners, with suggestion for corrective measures;
- Strategic oversight of planning, budgeting , implementing and monitoring the projects , tracking use of financial resources in accordance with UNDP rules and
- Regulations;
- Developments of Schematics/ engineering diagrams and drafting of them when necessary to ensure that international safety Standards are adhered to;
- Preparation of BOQs and estimates for the infrastructure Projects;
- Presentation of information/reports for identification of areas for support and
- interventions;
- Support the implementation of the transition programmes partnerships and preparation of reports;
- *Conduct regular field visits and assess the overall project implementation status* and provide corrective measure to be undertaken, as necessary;
- Presentation of information for formulation of infra structure activities, Preparation of project documents, drafts , work plans, Budget proposals on implementation arrangements;
- Provision of guidance to the executing agencies on routine implementation of projects, tracking use of financial resources;
- Follow up on performance indicators/success criteria, targets and milestones;
- Contribute of knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Educational Background**

- Bachelor's degree in Civil Engineering or structural engineering preferably with specialised certification in Construction Management is required.

**Experience**

- 3-5 years of progressively responsible experience in implementation and monitoring of small scale infrastructure project is required at the national or interna tional level.
- Experience in Usage of computers and Office Software Packages (MS Word , Exceletc) and advance Knowledge of spreadsheet and database packages, Experience in handling of web based management systems.

**Language Requirements**

- Excellent command of English and Tamil.
- Ability to communicate in sinhala would be an asset.

**Operational; Skills**

- Ability to work as a member of multi disciplinary and multicultural team.
- *Strong negotiation and interpersonal skills with good* initiative and sound judgment.
- Motivated, flexible and capable of working under pressure.
- Willingness to travel within Sri Lanka.
- Willingness to work out of normal office.

### DRIVER

**Under the supervision of the Direct Supervisor**

Ensure the reliable and secure driving services by driving office vehicles for the trans port of auth orised personal and delivery and collection of mail, documents and other items and mee ting official personal and visitors at the airport, visa and custom formalities and arran gement;
Ensure the cost saving through the proper use of vehicle by accurate maintenance of daily vehi cle logs, provision of inputs to preparation of vehicle maintenance plans and reports;
Ensures the proper day-to-day maintenance of the assigned vehicle through timely minor repairs, arrangements for major repairs, timely changes of oil, Check of tyres, brakes etc;
Ensures the availability of all the required documents/Supplies including vehicle insurance, Vehicle Logs, Office directory, map of the city/country, first aid kit, necessary spare parts;
Ensures that all immediate actions required by rules and regulations are taken in case of involvement in accidents;

- Perform any other duties as required.

**Educational Background**

- Secondary Education, Valid Driver's License:

**Experience**

- 2 years' work experience as a driver, Safe driving record: Knowledge of driving rules and regulations and skills in minor vehicle repair.
- Knowledge of the use of HF/VHF radio systems an asset.

**Language Requirements**

- Excellent command of English and Tamil.
- Ability to communicate in sinhala would be an asset.
- **Operational; Skills**
- Motivated ,flexible and capable of working under pressure.
- Willingness to travel within Sri Lanka
- Willingness to work out of normal office.

**7UNDP offers an attractive compensation package commensurate with experience, these non-career appointments are for a period of one year . please send your curriculum vitae, with names of two non- related referees and contact telephone numbers to reach us by Friday (06/05/2005) to No 7 , Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi(Fax 021-2285703) . Please indicate position applied for on the top left hand corner of the envelop. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Qualified Female Candidates are encouraged to apply.**

(சி.11833)



# அணித்தலைவர் பதவிக்காக காத்திருக்கிறேன் ஷேவாக்

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்டவீரர்களில் ஒருவர் வீரேந்தர் ஷேவாக்,தனது அதிரடி ஆட்டம் மூலம் ரசிகர்கள் நெஞ்சில் இடம் பெற்றுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக சமீபத்தில் நடந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரில் இவரது ஆட்டம் அபாரமாக இருந்தது.

சிறந்த அதிரடி ஆட்டக்காரரான ஷேவாக் தலைவர் பதவிக்காக காத்து இருப்பதாகக் கூறியுள்ளாார். ஒவ்வொரு கிரிக்கெட் வீரருக்கும் தலைவராக வேண்டும் என்ற இலட்சியம் இருக்கும்நானும் அதற்கு விதி விலக்கு அல்ல. அணித்தலைவர் பதவியை நானும் விரும்பு கிறேன். அதற்காக நான் அவசரப்படவில்லை. தலைவர் பதவிக்காக காத்திருப்பேன்.

தற்போது அணியில் எனது பங்கு எப்படி இருக்கிறதோ அதை அப்படியே தொடரநினைக்கிறேன். தலைவர் பதவிக்கு அதிக பொறுப்பு உண்டு. நான் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இருக் கிறார்கள். அவர்களுக்கு நெருக்கடியை சமாளிப்பது தெரியும். தலைவர் பதவிக்காக நான் அவசரப்படவில்லை இவ்வாறு ஷேவாக் கூறினார். டெஸ்டில் மூச்சதம் அடித்த ஒரே இந்திய வீரர் ஷேவாக் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் சகலதுறை வீரர் மாலிக்கிற்கு எதிரான தீர்ப்பு இன்று



பாகிஸ்தான் கிரிக்கெட்டின் சகலதுறை வீரரான சொகைப் மாலிக் அண்மையில் உள்ளூர் போட்டியொன்றில் தவறாக நடந்து கொண்டதால் அணியிலிருந்து இடை நிறுத்தவும் மேற்கிந்தியத்தீவுக்கான சுற்றுத் தொடரில் கலந்துகொள்ளும் வாய்ப்பை இழந்துவிடவும் சாத்தியம் இருப்பதாகக் கூறப்படுகிறது. மேற்படி சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த சனியன்று அவரை விசாரித்ததாகவும் தீர்ப்பு இன்று வெளியிடப்படும் என்றும் பெரும்பாலும் அவருக்கு மேற்கிந்தியத்தீவுகளுக்கான சுற்றுப் போட்டிக்கு அவர் தடை செய்யப்படுவார் எனத் தெரிய வருகிறது. இதற்காக மாலிக் மன்னிப்புக் கோரியிருந்தபோதும் இந்தச் சம்பவம் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஒரு அவப்பெயரை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது. அத்துடன் போட்டியைக் காணவந்த பல்லாயிரக்கணக்கான மக்களையும் போட்டிக்கான ஆதரவாளர்களையும் அசௌகரியத்துக்குள்ளாக்கியதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.




# அன்டிக்குவா டெஸ்ட்; மேலும் இரு வீரர்கள் சதம் 525 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்கா





மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான அன்டிக்குவா டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக மேலும் இரு வீரர்கள் பெற்ற சதங்களுடன் தென்னாபிரிக்கா நான்கு விக்கெட் இழப்பிற்கு 525 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முதல் நாள் எண்ணிக்கையான 214 ஓட்டங்களுடன் ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 245 ஓட்டங்களைப் பெற்றநிலையில் வில்லியர்ஸினதும், ஸ்மித்தினதும் விக்கெட்டுக்களை இழந்தது. பின்னர் களமிறங்கிய டிப்பென்னார் ஐந்து ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அடுத்ததாக கிப்ஸ் 23 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பெஸ்ட்டின் பந்து வீச்சில் டியோ நரைனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கலிஸ், பிரின்ஸ் இருவரும் மேற்கிந்தியத்தீவு வீரர்களின் பந்துகளை துவம்சம் செய்து முறையே 127, 114 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர். கலிஸ் 127 ஓட்டங்களைப் பெற்று முன்னாள் வீரரான கெரி கர்ஸ்டனின் சதச் சாதனையை முறியடித்துள்ளார். அத்துடன் மூன்று போட்டிகளில் தொடர்ந்து சதமடித்து ஹற்றிக் சத சாதனையையும் ஏற்படுத்தினார்.

# கிம் கிளிஜஸ்டர் தோல்வி



காயம் காரணமாக ஓய்விலிருந்து திரும்பி பல தொடர் வெற்றிகளைக் குவித்த டென்னிஸ் வீராங்கனை கிம் கிளிஜஸ்டர்ஸ் வார்சோவில் நடைபெற்ற ஜே.எஸ். கிண்ண அரையிறுதியில் ரஷ்ய வீராங்கனையான ஸ்வட்லனா குஸ்னட்ஸாவாவிடம் 2-6, 6-2, 6-3 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்துள்ளார்.

கிளிஜர்ஸ் முதலில் மூன்றுக்கு ஒன்று என்று முன்னிலை வகித்தபோதும் இறுதியில் தோல்வியைத் தவிர்க்க முடியாது போய் விட்டது.

இப்போட்டியின் இறுதியாட்டத்தில் யஸ்ரின் ஹெனின் ஹார்டினை எதிர்த்து குஸ்னட்ஸ்வா ஆடுவார். இந்த வெற்றி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கும்போது; இந்த வருடத்தில் இந்தப் போட்டி மிகத் திறமையான போட்டி என்றும் ஆச்சரியமானதென்றும் குறிப்பிட்டதோடு, தான் ஆரம்பத்தில் நினைத்த வாறு போட்டிகள் அமையவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆரம்பத்தில் தனது கை ஓங்கி வெற்றி வாய்ப்பு பிரகாசித்தபோதும் குஸ்னட்சோவா கடுமையாகப்போராடி வெற்றி பெற்றார் என கிளிஜர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் மே.தீவுக்கான சுற்றுலா அக்தருக்கு அணியில் இடமில்லை



மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிராக விளையாடவுள்ள பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் சேர்த்துக்கொள்ளப் படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சென்று பல்வேறு போட்டிகளில் விளையாட இருக்கிறது. இந்தச் சுற்றுப்பயணத்துக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அதில் 17 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். ஆனால் சொகைப் அக்தர் பெயர் அந்தப் பட்டியலில் இல்லை. அவர் நல்ல உடல் நிலையில் இருப்பதாக வைத்தியரின் சான்றிதழ் வாங்கி தேர்வுகுழுவிடம் கொடுத்து இருந்தார். ஆனால் அந்த உடல் நிலை சான்றிதழில் தேர்வு குழு திருப்தி அடையவில்லை. அதை நிராகரித்து சொகைப் அக்தரை அணியில் சேர்க்காமல் தேர்வுக் குழுவினர் மீண்டும் ஒரம் கட்டிவிட்டார்கள்.

அது போல மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் முகமது சமியும் பாகிஸ்தான் அணியில் இடம் பெறவில்லை. அவர் தகுந்த உடல் நிலையுடன் இல்லை என்று காரணம் கூறப்பட்டுள்ளது. முன்னாள் அணித்தலைவர் மொயின்கானும் 17 பேர் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார். இந்திய சுற்றுப் பயணத்தின் போது பாகிஸ்தான் அணியில் இடம்பெற்ற முகமது ஹபீஸ் தற்போது நீக்கப்பட்டு இருக்கிறார். அவருக்குப் பதில் யாசீர் அமீது சேர்க்கப்பட்டிருக்கிறார்.

மேற்கிந்திய தீவு-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே மே 18,21,22 ஆகிய திகதிகளில் மூன்று ஒரு நாள் சர்வதேச போட்டிகள் நடக்கின்றன. முதல் டெஸ்ட் போட்டி மே 26 முதல் 30 ஆம் திகதி வரையும், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜுன் 3 முதல் 7 ஆம் திகதி வரை நடைபெற இருக்கின்றன






இங்கிலாந்து ரொட்ரென் காம் அணிக்கும் அஸ்டன் வில்லா அணிக்கும் இடையில் நேற்று நடை பெற்ற கால்பந்து போட்டியில் வெற்றியைக் கொண்டாடும் அஸ்டன்வில்லா வீரர்களையும், ரொட்ரென்காம் வீரர் கோல் ஒன்றை அடிப் பதையும் படங்களில் காணலாம்

# மன்னார் பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிறைவு விழா

மன்னார் பொது விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மன்னார்ப் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட 23 விளையாட்டு கழகங்களின் 2005 ஆம் ஆண்டிற்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பேசாலை புனித வெற்றிநாயகி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், தாழ்வுப்பாடு புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், கவுஸ்பார் ஒசியன் விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும், பெற்றுக்கொண்டது. [illegible]விழாவுக்கு மன்னார் நகர பிரதேச செயலாளர் ஆர். வலஸ்தீஸ்வரசு அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விசுவலிங்கம் அவர்களும் மன்னார் மா[illegible] விடுதலைப்புலிகளின் விளையாட்டுத்துறைப் [illegible]றுப்பாளர் நிலான் அவர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் [illegible]ப்பு நிகழ்வு இ[illegible]பெற்றது. (18)

## கலந்துரையாடல்

மாதம் தோறும் கடைசி சனிக் கிழமைகளில் நடைபெறுகின்ற விளையாட்டுக்கழகங்களுக்கான ஒன்று கூடல் நேற்று முன்தினம் வலைப்பாடு ஜெகமீட்பர் வி.க. மைதானத்தில் அதன் தலைவர் தயா தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கிளி. மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா, பூநகரி பிரதேச விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியதுடன் அடுத்த மாத ஒன்றுகூடல் பல்லவன் வி.க. மைதானத்தில் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது. (சோ)

# பச்சிலைப்பள்ளி பிரதேச தடகள போட்டி இன்று

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்றும், நாளையும் நடைபெறுகின்றன.

இன்று காலை ஏழு மணிக்கு பளை பொது விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உதவிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் மேற்படி போட்டியில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன் கலந்து கொள்கின்றார்.

கடந்த மாதம் உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### சிந்தனைக்கு



சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல; அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தமிழரின் பாதுகாப்பு!

தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் கைவிடப் பட வேண்டும். சனநாயக வழிக்கு அவர்கள் திரும்ப வேண்டும் எனச் சிலர் கோரிக்கை விடுவதுண்டு. ஆயுதப்போராட்டத்தையே ஒரு குற்றச்சாட்டாக கூறுவதுமுண்டு. ஆனால் இவ்வாறு குறை கூறுபவர்கள், குறைகாண்பவர்கள் சிறிலங்கா ஆட்சியாளர்களின் இனவாத சிந்தனைகள் பற்றியும், அவர்கள் தமது அதிகார அபிலாசைகளுக்காக தமிழ் மக்களைப் பலியிடுவது குறித்தும் கண்டு கொள்ளாததும், கவலைப்படாததும் பெரிதும் ஆச்சரியத்திற்குரிய தொன்றாகும்.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் பிறரின் உந்துதலாலோ, தூண்டுதலாலோ ஏற்பட்டதொன்றல்ல. தமிழ் மக்களின் நீண்டகால உரிமைக்கான போராட்டம் சாத்வீகப்போராட்டத்தில் தொடங்கி படிப்படியாகப் பரிணாமம் பெற்று முழுஅளவிலான ஆயுதப்போராட்டமாக வளர்ச்சிகண்டது என்பதே உண்மை. அதாவது தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டு அவர்கள் மீது ஆயுத ரீதியிலான வன்முறையும் அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிடப் பட்டபோதே தமிழ் மக்கள் தவிர்க்க முடியாது ஆயுதம் தாங்கிப் போராடவேண்டியதாகியது.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான தமிழ் தலைமைகள் எப்பொழுதுமே சமாதானப்பேச்சுவார்த்தை; நட்பு ரீதியிலான தீர்வு என்பனவற்றில் அக்கறை காட்டியே வந்துள்ளது. அதன்வெளிப்பாடே காலத்திற்குக் காலம் தமிழ்தலைவர்கள் ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களை நடத்தினர். உடன்பாடுகளையும் செய்து கொண்டனர்.

ஆனால் பேச்சுவார்த்தைகளும், உடன்பாடுகளும் ஒருபுறத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்களினால் காலம் கடத்துவதற்கான தொரு வழிமுறையாகவும், மறுபுறத்தில் பௌத்த சிங்கள அடிப்படை வாதத்திற்கு எழுச்சியூட்டும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான வையாகவுமே இருந்தன. இதன்பின்னரான நிகழ்வானது ஆட்சியாளர்களே உடன்பாடுகளை கிழித்தெறிதல் அன்றி குப்பைக்கூடைக்குள் போடுதல் என்ற நிலைக்கு இட்டுச் சென்றது.

இவை கடந்த கால வரலாறு, இன்று தமிழ் மக்கள் உரிமைக்கான ஆயுத போராட்டத்தைக் கைவிடவேண்டும் எனக் கூறவிளைபவர்கள் தமிழ் மக்கள் மீது நீண்ட காலமாக ஏமாற்றப்பட்டதையோ அன்றி பௌத்த - சிங்கள பேரினவாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட ஒடுக்கு முறைகளையோ, அராஜயகத்தையோ கருத்திற் கொண்டதாக இல்லை.

தமிழ் மக்கள் ஆயுதப்போராட்டத்தைக்கைவிட்டு சனநாயக வழிக்குத்திரும்ப வேண்டும் எனக்கோருபவர்கள் ஏன் தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கவேண்டியதாகியுள்ளது என்பதையோ அன்றி அவர்களின் பாதுகாப்புக்குறித்தோ கவலை கொள்ளவில்லை. பல்லாயிரக்கணக்கான தமிழரை சிங்கள ஆட்சியாளர்கள் பல்வேறு வழியில் கொன்று குவித்ததை இவர்கள் கண்டுகொண்டதாக இல்லை.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் யுத்த காலத்திலும் சரி, அதற்கு பின்னரான யுத்த நிறுத்த காலத்திலும் சரி மனிதாபிமான மிக்கவர்களாகவோ அன்றி சனநாயகவாதிகளாகவோ அன்றி மனித உரிமைகளின் பாதுகாவலர்களாகவோ இருந்ததில்லை. அவர்கள் எப்பொழுதும் பேரினவாத சிந்தனை கொண்டவர்களாகவும், ஒடுக்கு முறையாளர்களாகவும் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாகவே கருதினர், செயற்பட்டனர்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் மனிதாபிமான ரீதியில் கூடத் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவுசெய்யத்தயாராக இல்லை என்பதை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளை நிறைவேற்ற அவர்கள் தயாராக இல்லாததில் இருந்தும், சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவியின் முகாமைத்துவம் தொடர்பாகப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கத் தயாராக இல்லாமல் இருப்பதில் இருந்தும் புரிந்துகொள்ளுதல் முடியும்.

அடுத்ததாக தமிழ் மக்கள் மீது பயங்கரவாதச் சட்டம் போன்ற ஒடுக்கு முறைச்சட்டங்களைப் பிரயோகித்ததன் மூலம், அவர்களின் அடிப்படை உரிமைகளை மறுத்ததோடு, மக்களைச் சொந்த வாழ்விடங்களில் இருந்து விரட்டியடித்தும், அவர்களின் தொழில் வாய்ப்புக்களை முடக்கியும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அது பறித்தெடுத்துள்ளது. உயர்பாதுகாப்பு வலயம், மீன்பிடித்தலில் கட்டுப்பாடுபோன்றவை மூலம் தமிழ் மக்களின் வாழ்வுரிமையையே ஆட்சியாளர் மறுத்து வருவதைப் புரிந்து கொள்ளமுடியும்.

அடுத்ததாக தமிழ் மக்களின் சனநாயக உரிமைகளான சிந்தனை, எழுத்து, பேச்சுச்சுதந்திரம் என்பனவற்றையும் சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லை. இதன் வெளிப்பாடே ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஜி.நடேசன், டி.சிவராம் ஆகியோரின் படுகொலைகளாகும். அதாவது, சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைச் செயற்பாட்டையும், தமிழ்த்தேசியத்திற்கு வலுவூட்டும் நடவடிக்கைகளையும் வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோரை சிங்கள ஆட்சியாளர்கள் தமது ஆயுதப்படையினர், குண்டர்கள், கைக்கூலிகள் மூலம் அழித்து,ஒழித்து விடுகின்றனர்.

இந்நிலையில் தமது உரிமைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம். சனநாயகத்திற்கு விரோதமானது எனவும், அவை கைவிடப்படவேண்டும் எனக்கோருவதும் எத்தனை தூரம் பொருத்தப்பாடனதாகும். ஏனெனில் ஆட்சியாளர்கள் சனநாயகவாதிகளாக இருத்தல் வேண்டும். அன்றி சாத்வீகப் போராட்டத்திற்கு மதிப்பளிப்பவர்களாக இருக்க வேண்டும். ஆட்சியாளர்கள் சனநாயக விரோதிகளாகவும், கொலைகாரர்களாகவும் இருக்கும் போது எவ்வாறு அவர்களுடன் சமரசம் செய்ய முடியும்? சனநாயகம் என்ற ரீதியில் வேட்டைக்காரனுடன் புறாக்கள் அம்பெட்டும் தூரத்தில் நின்று பேச்சு நடத்தலாமா?

# அரசாங்கம் தேர்தலை நோக்கிச் செல்கின்றது இவ்வாண்டு இறுதிக்குள் நடத்தப்படலாம்

### முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அண்மைய நடவடிக்கைகள் தேர்தல் ஒன்றை நோக்காகக் கொண்டவை. இந்த ஆண்டு இறுதிக்கு முன்பதாக பாராளுமன்றத் தேர்தல் ஒன்று நடைபெறும் வாய்ப்புக்களே உள்ளது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அத்தனகலயில் அஷ்ரப் ஞாபகார்த்த சிகிச்சை நிலையம் ஒன்றைத்திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி ஆட்சியினை இல்லாதொழிக்க ஜே.வி.பி முயற்சிக்கின்றது. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதி ஒருவர் நாட்டில் இருப்பதனால் ஜே.வி.பி யினர் விரும்பியவாறு நாட்டினை ஆள முடியவில்லை. ஜே.வி.பியின் நடவடிக்கைகளுக்கு நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறை தடையாக இருப்பதனால் அதனை அகற்றுவதற்கு ஜே.வி.பி முயற்சிகளை மேற்கொள்வதாக ஹக்கீம் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் நிவாரணங்கள் கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதால் அவர்கள் மிகவும் விரக்தி அடைந்த நிலையில் உள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் கூறினார். (32)

# இலங்கையில் ஒரு அரசாங்கத்தின் ஆட்சி தற்போது இடம்பெறவில்லை - திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஓர் அரசாங்கத்தின் ஆட்சி நடைபெறவில்லை. இரண்டு அல்லது மூன்று தரப்பினர் இலங்கையை ஆட்சி செய்வதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றார். பொதுக்கட்டமைப்பு தொடர்பான 99 வீதமான திட்டங்கள் பூர்த்தி அடைந்துள்ளதாக சனாதிபதி கூறிவரும் நிலையில் ஜே.வி.பி அதனை கடுமையாக எதிர்ப்பதோடு பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் பட்டால் தாங்கள் அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் பிரதமர் மகிந்த ராஜபக்ச தனக்கு பொதுக்கட்டமைப்பு குறித்து எதுவுமே தெரியாது என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில் நாட்டின் அரசாங்கம் எது என்பது குறித்து சந்தேகம் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்து கொண்ட போது அது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என எதிர்க்கட்சியாக இருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி தெரிவித்தது.

ஆனால் இப்போது சனாதிபதியால் முன்னெடுக்கப்படும் பொதுக்கட்டமைப்பு குறித்து அவருடைய கட்சியைச் சேர்ந்த பிரதமருக்கே எதுவும் தெரியாத நிலை தோன்றியுள்ளதாக அத்தநாயக்கா சுட்டிக்காட்டினார். (32)

## எரிபொருள் மின்சக்தி அமைச்சரை பதவிநீக்க திரைமறைவு முயற்சிகள்

எரிபொருள் மின்சக்தி துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்குவதற்கான திரைமறைவு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மின்சார சபை ஊழியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சார சபையை தனியார் மயமாக்கக்கூடாது என்னும் நிலைப்பாட்டில் கடுமையாக உள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்கிவிட்டு அந்தப் பதவியினை தாங்கள் கைப்பற்ற சிலர் முனைவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர்களின் ஒத்துழைப்புடன் சில பிரதி அமைச்சர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுவருவதாக தொழிற்சங்க தரப்பினர் தெரிவித்துள்ளார்கள். (32)

### சிவராமின்...

சிறிலங்கா இராணுவ முன்னணி காவல் நிலையப் பிரதேசத்திலிருந்து செங்கலடி - பதுளை வீதி கொடுவாமடு பாலத்தில் இராணுவ முன்னணி காவல் நிலையப் பிரதேசம் வரை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் சிறிலங்கா இராணுவத்தினரால் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

### தமிழர்...

தம் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே விடாப்பிடியான கரிசனை கொண்டுள்ளது என்பதை சகோதர சிங்கள உழைக்கும் வர்க்கம் புரிந்து கொள்ளவேண்டும்.

மெய்யான பிரச்சினைகளில் இருந்து சிங்கள தேச உழைக்கும் வர்க்கத்தினரை ஏமாற்றி திசை திருப்பும் நோக்குடன் சிங்கள தேச அரசியல் கலாச்சாரம் பேரினவாத அடித்தளத்தில் நின்று கோலோச்சுகின்றது. சிங்கள அதிகார வர்க்கத்தினரை முறியடிக்க முன்வருமாறு சிங்கள உழைக்கும் வர்க்கத்தினரை சகோதர வாஞ்சையுடன் அழைக்கின்றோம்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்களாகியும் உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ்த் தேச மக்களையும் தாக்குவதன் மூலமும், படுகொலைகள் செய்வதன் மூலமும் - சீண்டும் சிறிலங்கா இராணுவத் தினதும், அதன் துணைக்குழுக் களினதும் செயற்பாடுகள் போர் முனைப்பையே எடுத்துக் காட்டுகின்றன.

எனவே சிறிலங்காப் படைத்தரப்பும், அதன் துணைக் குழுக்களும் எமது தாயகப் பிரதேசத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான முன்மொழிவுகளை அப்பட்டமாகவே நிராகரித்து, சிறிலங்கா அரசாங்கமானது, வேண்டுமென்றே நிரந்தர சமாதானத்துக்கான பாதையில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி தடம் புரட்டி விட்டுள்ளது.

அத்துடன் இன அழிப்புப் போரை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கின்றது. இதற்குத் தமிழ்த்தேச மக்களாகிய நாம் முகம்கொடுக்க தயாராக உள்ளோம். என அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேசியத்...

படாது, மக்களுக்குக் கொண்டு செல்லும் காத்திரமான, பொறுப்புமிக்க பங்கு, அத் தேசத்தின் ஊடகங்களையே சார்ந்துள்ளது.

இலங்கையில் தமிழீழத்தின் உண்மை நிலையினை காலவோட்டத்தில் அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியல், சமூக, பண்பாட்டு நிகழ்வுகளை வெளியுலகிற்கும், அத்தேசத்தின் மக்களுக்கும் கொண்டு செல்லும் பெரும் பொறுப்புமிக்க பணியினை ஆற்றிக் கொண் டிருக்கும் ஈழநாதத்தின் மட்டக்களப்பு பதிப்பு, தனது ஓராண்டு அகவையைப் பூர்த்தி செய்வதையிட்டு பெருமகிழ்ச்சியும், உற்சாகமும் அடைகிறேன்.

எமது தேசத்தின் எதிர்பார்ப்புக்களை, எமது மக்களின் உள்ளத்துணர்வுகளைத் தாங்கிக் கொண்டு, அப்பகுதி மக்களின் வாழ்வோட்டத்தை, கட்டவிழ்ந்துக்கொண்டிருக்கும் சம்பவங்களின் பிரதிபலிப்பாக பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும், உறுதியுடன் தனது பணியினை ஆற்றிக்கொண்டிருக்கும் மட்டக்களப்பு ஈழநாதம் பதிப்பின் பொறுப்புமிக்க காத்திரமான பணி பாராட்டுதற்குரியது.

எமது தேசத்தின் யதார்த்த நிலை, அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் உள்ளத்துணர்வுகள். உண்மை நிலை மாறுபடாது வெளியுலகிற்குக்கொண்டு செல்லப்பட வேண்டும். என்றே எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்புக்களை மனதில் கொண்டு ஆற்றலுடனும், துடிப்புடனும் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அதன் பணி, எமது தேசத்திற்கும் அப்பகுதி மக்களுக்கும் உற்சாகத்தையும் மகிழ்வையும் அளித்துள்ளது.

மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே மட்டக்களப்பு ஈழநாதப் பதிப்பின் வேகமான வளர்ச்சியும், அங்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூக, அரசியல், பண்பாட்டு நிகழ்வுகளை உற்சாகத்துடன் வெளிக் கொண்டு வந்து கொண்டிருக்கும் பாங்கும் போற்றுதற்கும், பாராட்டுதற்கும் உரியது. மட்டக்களப்பு ஈழநாதப் பதிப்பின் முன்னேற்றத்தில் அக்கறையுடனும், பொறுப்புணர்வுடனும் தமது பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் அதன் ஆசிரியர் பீடத்தினதும், மற்றும் ஏனைய பணியாளர்களினதும் முயற்சியும், ஊக்கமும் கண்டு பெருமிதமடைகின்றேன்.

இரண்டாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் மட்டக்களப்பு ஈழநாதப் பதிப்பு, மேலும் முன்னேற்றமான வளர்ச்சிப் போக்குகளை தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு, எமது தேசத்தின் முன்னணி செய்திஏடுகளில் ஒன்றாக மாற்றம் காணவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன். எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.



யாழ்., திருமலை மாவட்டங்களில் நடைபெற்ற மே நாள் நிகழ்வுகள்....

### பலகோடி ரூபா செலவில்-

# சிறிலங்கா முப்படையினருக்கும் ஆயுததளபாட கொள்வனவு

(கொழும்பு)

சிறிலங்கா முப்படையினருக்கும் பல கோடி ரூபா செலவில் ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் பிரகாரம் சிறிலங்காவின் படைத்துறை உயர் மட்டக் குழு ஒன்று பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்கு இராணுவ தளபாடங்களை பார்வையிட்டு அவற்றை தேர்வு செய்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்து விட்டு நாடு திரும்பியிருக்கிறது.

முப்படைகளின் பிரதானியும் கடற்படைத்தளபதியுமான தயா சந்தகிரி தலைமையில் உயர்மட்ட படை அதிகாரிகள், ஆயுதப் பொறியிலாளர்கள் கொண்ட இக்குழு முதலில் பிரிட்டன் சென்றுள்ளது. அங்கு பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமான ஒரு படைத்தளபாட விநியோக கம்பனி ஒன்றுக்கு சென்று ஆயுதக்கொள்வனவு தொடர்பான தமது விருப்பத்தை இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதை அடுத்து கடந்த வாரம் கொழும்பு வந்த குறிப்பிட்ட ஆயுத விநியோகக் கம்பனியினர் சிறிலங்கா கடற்படை கோரிய தளபாடங்கள் குறித்த தமது விபரத்தை சமர்ப்பித்துள்ளனர். சிறிலங்கா கடற்படையினர் கேட்டபடி விற்பனை நிலையில் தம்மிடம் மூன்று துருப்பு தாங்கிக் கப்பல்கள் உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இவை ஒவ்வொன்றும் ஒரு உதைபந்தாட்ட மைதானம் போல மூன்று மடங்கு பெரிய பரப்பு உடையவை. யுத்தத்தின்போது துருப்புக்களை தரையிறக்கவும் டாங்கிகள் மற்றும் கனரக ஆயுததளபாடங்களை தரைக்கோ அல்லதுவேறு கலத்துக்கோ மாற்றவும் வான்கலங்கள் வந்திறங்கிச் செல்லவும் கூடிய பாரிய பயன்பாட்டுக்கு இக்கப்பல்கள் ஏதுவானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் இரண்டு கப்பல்கள் யுத்தத்தின் போது தாக்கப்பட்டு பின்னர் திருத்தப்பட்டு 1985, 1987 களில் சேவையில் இணைத்துக் கொள்ளப் பட்டவை. மற்றைய கப்பல் 1968 முதல் சேவையில் உள்ளது. கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேற்பட்ட இந்தக்கப்பல்களில் ஒன்றைத்தான் கடற்படை வாங்கத்திட்டமிட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட 180 கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான கப்பலை வாங்க கடற்படை மிகுந்த ஈடுபாட்டுடன் உள்ளதாக தெரியவருகிறது. அத்துடன் சுமார் 18கோடி ரூபா பெறுமதியான கரையோர காவலுக்கான ஒரு கப்பலை கொள்முதல் செய்யவும் கடற்படை தீர்மானித்துள்ளது.

## சிவராமிற்கு அஞ்சலி செலுத்த மட்டு.இல் இன்று துக்கதினம்

(கொழும்பு)

கொழும்பில் கடத்திச்சென்று படுகொலை செய்யப்பட்ட இராணுவ அரசியல் ஆய்வாளர் மாமனிதர் டி.சிவராமிற்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு மட்டக்களப்பில் இன்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துக்கதினத்தை ஒழுங்கு செய்த பொதுமக்கள் ஒன்றியம் பொது மக்களை கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுமாறும் வியாபாரத் தலங்களை மூடிவைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### கருணா..

செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவர்கள் பயணம் செய்த வாகனத்தில் கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டதாகவும் இதன் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

இனியபாரதி கொழும்பில் தங்கியிருக்கவில்லை என்றும் அவருக்கும் இந்த கடத்தல் சம்பவத்திற்கும் இடையில் தொடர்பு இல்லை என்றும் மக்களை நம்பவைப்பதற்கான ஒரு நாடகமாக இது இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அல்லது இனிய பாரதியை பாதுகாக்கும் நோக்கில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றிருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.(32)

### தேசியத்....

லாளர்கள் பேரணியில் எடுத்து வந்தனர். பேரணியின் முடிவில் மாவட்ட ரீதியாக பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டது. கூட்டத்தில் அம்மாவட்டங்களுக்குரிய மே நாள் பிரகடனங்கள் வெளியிடப்பட்டன. தொடர்ந்து கருத்துரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலுமிருந்து தொழிலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்ட மாபெரும்பேரணி கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி ஏ-9 பிரதான வீதிவழியாக கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தினை வந்தடைந்து அங்கு பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

மேதின ஏற்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் மேற்படி பேரணி ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து தற்போதைய பொருளாதார அரசியல் சூழ்நிலைகள் மற்றும் தமிழ்த் தேசியத்திற்கெதிரான சதிகள் என்பனவற்றை சித்திரிக்கும் வகையில் அலங்கார ஊர்திகள் பின்தொடர இம்மாபெரும் மேதினப் பேரணி பிற்பகல் 5.00 மணிக்கு கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தினைத் வந்தடைந்து அங்கு மேதின ஏற்பாட்டுக் குழுத் தலைவர் டாக்டர் கே.வீ.கே திருலோகமூர்த்தி தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது.

தலைமையுரையினையடுத்து மேதினப் பிரகடனத்தினை மேதின ஏற்பாட்டுக்குழுவைச்சேர்ந்த இராசன் வாசித்தார். அதனைத் தொடர்ந்து மேதின உரையினை கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம், கரைச்சி தெற்குப் ப.நோ.கூ சங்கத்தலைவர் குகராசா, கிளி.மாவட்ட கமக்கார அமைப்புத் தலைவர் மனோகரன் பாராளுமன்ற உறுப்பினர் …ழவேந்தன் கிளி.வலய உதவிக் க… பணிப்பாளர் அமிர்தலிங்கம், …மகளிர் அரசியல் துறைத் து… பொறுப்பாளர் செல்வி.பி.தமிழ்… ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து பேரணியில் பங்கு பற்றிய ஊர்திகள் தெரிவில் முதலாமிடத்தினை கிளிநொச்சி வருவாய்ப் பகுதியினருக்கம், இரண்டாமித்தினை இராசன் கடல் உணவு வாணிபத்தினரும், மூன்றாமிடத்தினை பண்டார வன்னியன் ஓட்டுத்தொழிற்சாலையினரும் பெற்றுக்கொண்டனர். பேரணியில் கலந்துகொண்ட ஊர்திகளுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து மகளிர் கலைபண்பாடு கழகத்தினரின் விடுதலைக் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. நூற்றிற்கும் மேற்பட்ட அலங்கார ஊர்திகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**மல்லாவியில்...**

மாலை 3.00 மணியளவில் மல்லாவி பிரதான வீதியின் முதலாம் ஆம் யூனிற் பகுதியில் ஆரம்பமாகிய மேதினப் பேரணிகள் சமகால நிகழ்வுகளை சித்திரிக்கும் ஊர்திகள் மற்றும் சுலோகங்களைத் தாங்கியவாறு மல்லாவி வண்ணன்விளையாட்டு மைதானத்தை சென்றடைந்து அங்கு முல்லை.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைக்க அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது. தொடர்ந்து பேரணியில் பங்கு பற்றிய ஊர்திகளுக்குப் பரிசில்கள் வழங்கப் பட்டது.

**முள்ளியவளையில்....**

முள்ளியவளைப் பிரதேசத்தில் ஓட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 40க்கு மேற்பட்ட ஊர்திகளும் பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்ட எழுச்சி ஊர்வலம் பி.ப.4.00 மணிக்கு தண்ணீருற்று நீராவிப்பிட்டி யாழ்.அரைக்கும் ஆலைச் சந்தியில் இருந்து ஆரம்பமானது. வன்னித்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஊர்வலத்தை தலைமைதாங்கி ஆரம்பித்து வைத்தார்.

ஊர்வலம் நகர்ந்து வித்தியானந்தக்கல்லூரி விளையாட்டுத்திடலை சென்றடைந்து அங்கு பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தலைமையில் எழுச்சிக் கூட்டம் வித்தியானந்தக்கல்லூரி சுந்தரலிங்கம் அரங்கில் 5.15 மணிக்கு ஆரம்பமானது.

எழுச்சி கருத்துரைகளை முல்லை. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சண்முகநாதன், முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை ஆசிரியை நந்தினி, முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் க.ஜெகதீஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து மேதின ஊர்வலத்தில் பங்கு கொண்ட ஊர்திகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு புள்ளிகள் அடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம் பெற்ற ஊர்திகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

**யாழ்.குடாநாட்டில்...**

யாழ். குடாநாட்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கேற்க மே நாள் நிகழ்வுகள் பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளன. மாவட்ட பொது அமைப்புக்களும், தொழிலாளர் அமைப்புக்களும் ஒன்றிணைந்து மேற்கொண்ட ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

முன்னதாக நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் தமிழீழத் தேசியத் தலை… வேபிரபாகரன் அவர்களின் உருவப்படத்தினை தாங்கிய ஊர்தி ஆரம்பத்தில் நகர்ந்து வர ஆரம்பமான மே நாள் பேரணி அரசடி வீதியூடாக கந்தர்மடம் சந்தியைச் சென்றடைந்து பின்னர் பலாலி வீதி வழியாக திருநெல்வேலிச் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தைச் சென்றடைந்தது.

பேரணியில் சமகால அரசியல், பொருளாதார நிலைகள், சிறிலங்காப் படை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், உயர்பாதுகாப்பு வலயங்கள், படையினரின் துணையுடனான சதிகார நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைத் தாங்கிய வகையிலான நூற்றுக்கணக்கான ஊர்திகள் பங்கு கொண்டிருந்தன.

இந்த ஊர்திகளை யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அமைப்புக்கள் வடிவமைத்து பேரணியில் பங்கேற்க வைத்ததுடன், இப்பகுதிகளிலிருந்து தொழிலாளர்களும், பொது மக்களும் என பல்லாயிரக்கண்கானோர் பங்கு கொண்டதுடன் தமது எழுச்சிக் கோசங்களையும் வெளிப்படுத்தினர்.

பேரணி பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய தொழிற் சங்கக் கூட்டமைப்புத் தலைவர் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தொடந்து பொங்கு தமிழாளர் செ.விந் தன் தலைமையில் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் அரங்காற்றுகை நடைபெற்றது. அதன் பின்னர் மே நாள் பிரகடனம், சிறப்புரை, முதன்மையுரை ஆகியன நடைபெற்றன.

**மன்னாரில்...**

நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து பேரணி ஆரம்பமாகி பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது. அங்கு விசேட பொதுக் கூட்டம் இடம் பெற்றது. இங்கு இடம் பெற்ற கலை நிகழ்வில் சாந்தன் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

(சோ.கு.ச.தீ.சு.ஆ.08,18,24,28,33,41)

## கண்ணீர் அஞ்சலி



### மாமனிதர் தர்மரட்ணம் சிவராம்

பேனாவின் வலிமையால் அடக்குமுறை
ஆட்சியாளரைச் சர்வதேசத்திற்கு
அம்பலப்படுத்தி தமிழ்த்தேசியத்திற்கு
வலுச்சேர்த்த மாமனிதர்
தர்மரட்ணம் சிவராம் அவர்களின்
இழப்பு தமிழ் இனத்திற்கு
பேரிழப்பாகும். இவரிற்கு எமது
கண்ணீர் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

ஈழநாதம்